பக்கங்கள்:- பத்து

Registered as a News paper in Sri Lanka


விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# வலம்புரி
VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 வைகாசி 09 வெள்ளிக்கிழமை (23.05.2003) தொலைபேசி ~ 2223378 ஒலி 155

## புலிகளின் கோரிக்கைக்கு உடன் பதிலளிக்க மறுப்பு



# சமாதான முயற்சியில் பிரதமர் பின்னடிப்பு

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு புலிகள் நேரில் சென்று நிவாரணம் வழங்கினர்

(கொழும்பு)

தென்இலங்கையில் இயற்கை அனர்த்தத்தால் மோசமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேற்று விடுதலைப்புலிகள் மனிதாபிமான உதவிகளின் அடிப்படையில் நிவாரணப் பொருட்களை நேரடியாக வழங்கினர்.

இந் நிவாரணப் பொருட்கள் வழங்கும் நிகழ்வில் விடுதலைப்புலிகளின் அரசியல் பிரமுகர்களான எழிலன், அன்பரசன் ஆகியோரும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் பொ. சந்திரசேகரனும் கலந்துகொண்டனர்.

தென் இலங்கை மக்களுக்காக தமிழர் தாயகப் பிரதேசத்தில் சேகரிக்கப்பட்ட 40 லட்சம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருட்கள் அம்

(10ம் பக்கம் பார்க்க)

## இராஜதந்திரிகள் கருத்து

(நமது நிருபர்)

**அரசியல் யாப்புக்கு புறம்பான வகையில் வடக்குக் கிழக்கை கட்டி எழுப்புவதற்கான அதிகாரங்கள் நிறைந்த இடைக்கால நிர்வாக கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதில் விடுதலைப்புலிகள் உறுதியான நிலைப்பாட்டை கொண்டிருப்பது பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை நிலைகுலைய வைத்திருப்பதாக மேற்குலக இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.**

அடுத்த மாதம் 9,10ம் திகதிகளில் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கான நிதியுதவி வழங்கும் மாநாட்டில் விடுதலைப்புலிகளை பங்குகொள்ளச் செய்வதில் சர்வதேச சமூகம் ஈடுபட்டுள்ள அதேவேளை விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகம் தொடர்பான உறுதியான நிலைப்பாடு, ரணில் விக்கிரமசிங்காவிற்கு பெரிதும் அசெளகரியங்களை ஏற்படுத்தியுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அபிவிருத்தி லொத்தர் சபையை ஏற்கனவே தனது அதிகாரத்தின் கீழ் கொண்டு வந்திருந்தமையை அடுத்து தென் இலங்கை அரசியலில் ஈடுபட்டுள்ள ''அதிகார இழுபறி'' முற்றுப் பெறாத நிலையில் விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகக் கோரிக்கையை அரசியல்

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகளின்கோரிக்கையை பிரதமர் ஏற்கக் கூடாது

### பொ.ஐ.முன்னணிப் பேச்சாளர் கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகளால் கட்டுப்படுத்தத்தக்க இடைக்கால நிர்வாக சபை ஒன்றிற்கு பிரதமர் உடன்படக் கூடாது. புலிகளின் இந்தக் கோரிக்கை, அவர்கள் தமது அரசியல், இராணுவ நிலைப்பாட்டை மேலும் வலுப்படுத்தும் நடவடிக்கையாகும். எனவே இதனை நிராகரிக்க வேண்டும். இவ்வாறு பொ.ஐ.மு. பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

தான் இதனை நிராகரிப்பதாகவும் ஜே.வி.பி.யும் இதனை நிராகரிக்கும் என்றும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசாங்கம் இதனை ஏற்றுக்கொள்ளாது என்றும் தெரிவித்த அவர் புலிகளுடன் பேச்சுக்கள் நடத்தும் அரசாங்கப் பேச்சாளர்களின் பேரம் பேசும் திறன்களையும் விமர்சித்தார். புலிகள் ஆயுதங்களை வைத்திருக்கும் நிலையில் அவர்களின் கையில் நிர்வாகம் ஒன்றை வழங்கும் செயல் பரிகாசத்திற்கு

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் புலனாய்வு உறுப்பினர் கடத்தப்பட்டு சுட்டுக் கொலை

### அம்பாறை காரைதீவில் சம்பவம்

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள காரைதீவில் இருந்து இனந் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் புலனாய்வு உறுப்பினர் ஒருவர் நேற்றுக் காலை சூட்டுக் காயங்களுடன் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

அம்பாறை காரைதீவைச் சேர்ந்த பூவண்ணன் என அழைக்கப்படும் காத்தமுத்து கோணேஸ்வரன் என்ற போராளியே உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-

காரைதீவில் உள்ள தனது வீட்டிற்குச் சென்ற பிரஸ்தாப போராளி நேற்று முன்தினம் இரவு இனந் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டதுடன் அவரது சடலம் முஸ்லிம் கிராமங்களில் ஒன்றான நிந்தவூருக்கு அருகில் உள்ள ஆற்றங்கரையில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட சடலத்தின் தலை, நெஞ்சு, வயிறு ஆகிய பகுதிகளில் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன.

நேற்றுக் காலை 10மணியளவில் சம்பவ இடத்திற்கு சென்ற அம்பாறை மாவட்ட நீதிவான் விசாரணைகளை மேற்கொண்டார். பின்னர் சடலம்

(10ம் பக்கம் பார்க்க)

## அரசின் வெற்று உத்தரவாதங்களை நம்புவதற்கு புலிகள் தயாரில்லை

### பத்திரிகையாளர் மாநாட்டில் தமிழ்ச்செல்வன்



(அலுவலக நிருபர் பவன்)

தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கும் எமக்கு, எம் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்வதற்கான தீர்மானங்களை எடுத்து, அதனை நடைமுறைப்படுத்தக் கூடிய அதிகாரம் உள்ள இடைக்கால நிர்வாகம் உருவாக்கப்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

இவ்வாறு விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

நேற்று முற்பகல் 10.30மணியளவில் கிளிநொச்சியில் உள்ள அரசியல் துறை நடுவப் பணியகத்தில் பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசியபோதே அவர் இதனை

(10ம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பினர் அமெ. தூதுவருடன் சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்ஸ்சை சந்தித்துப் பேச்சுநடத்தியுள்ளனர்.

இச் சந்திப்பு நேற்று முற்பகல் 10மணிக்கு கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இடம்பெற்றது.

விடுதலைப்புலிகளின் இடைக்கால நிர்வாகக் கொள்கை அவர்களது தற்போதைய நிலைப்பாடு குறித்து கூட்டமைப்பு எம்.பிக்கள் தூதுவருக்கு விளக்கிக் கூறினார்.

இதன்போது விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வார்களா என்று தூதுவர் அஸ்லி வில்ஸ் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த எம்.பிக்கள் அது அரசாங்கத்தின் செயற்பாட்டையும் நடவடிக்கையையும் பொறுத்தது. விடுதலைப்புலிகள் தமது நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்தி உள்ளனர். அவர்களது நியாயமான கோரிக்கையை ஏற்று

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இன்று ஒரு தகவல்

## சுற்றுச் சூழலைப் பேணுக!

இதுவரையும் நாம் அடிக்கடி கவலைப்பட்டது மனிதனிடம் இருந்து மனிதனைக் காப்பாற்றுவது எப்படி என்பதற்காகத் தான்! ஆனால் இனிமேல் அதைவிடப் பெரியகவலையொன்று வந்துவிட்டது. மனிதனிடமிருந்து பூமியைக் காப்பாற்றுவது எப்படி? என்பதுதான் இன்றைக்குப் பெரிய கவலை மனிதனுக்கு கோபம் வந்தால் சூடாக ஆகிவிட்டான் என்று சொல்வது உண்டு. இப்பொழுது பூமிக்கு கோபம் வந்துவிட்டது. அது சூடாக ஆகிக்கொண்டிருக்கிறது. பூமிக்கு கோபத்தை உண்டாக்கியது யார்? மனிதன் தான் இன்னும் 25 வருடங்களுள் பூமியின் உஷ்ணம் சராசரி! முதல் 2 டிகிரி வரையும் அதிகரிக்கும் என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். சில பகுதிகளில் 6 டிகிரி வரையும் கூட அதிகம் ஆகலாமாம்.

சரி... ஆகிவிட்டுப்போகிறது. அதனால் நமக்கென்ன என்று இருந்து விடமுடியாது. அதனால் பல பாதக விளைவுகள் ஏற்படும். உதாரணத்துக்கு ஒன்றைப் பார்ப்போம். பூமியின் வெப்பம் அதிகரிக்கும் போது வட துருவம் தென்துருவம் ஆகியவற்றில் இருக்கின்ற பனிக் கட்டிகள் உருக ஆரம்பிக்கும். அதனால் கடல்மட்டம் உயரும். பல தீவுகள் மூழ்க வேண்டிய நிலைக்கு ஆளாகி விடும். உலகம் முழுவதும் கடல்ஓரப் பகுதிகள் மூழ்கும். அங்கே இருப்பவர்கள் எல்லோரும் வேறும் இடம் பார்க்க வேண்டியது தான். உதாரணத்திற்கு கடல்மட்டம் ஒரு மீற்றர் உயர்ந்தால் வங்க தேசத்தில் 4 லிருந்து 8 கோடிமக்கள் வேறு இடம் தேடவேண்டி இருக்கும்.

சரி! பூமி கோபப்படுகின்ற அளவுக்கு மனிதன் பண்ணிய தவறு தான் என்ன? இயற்கையின் சமநிலையை கெடுத்து விட்டான். நாம் பிராண வாயுவை எடுத்துக் கொண்டு கரியமில வாயுவை வெளியில் விடுகிறோம். இந்தக் கரிய மில வாயுவை மாம் செடிகொடிகள் எடுத்துக் கொண்டு பிராண வாயுவை வெளியில் விடுகின்றன. இவை ஒழுங்காக நடந்து கொண்டிருந்தால் சரி! ஆனால் மனிதன் காடுகளை அழிக்க ஆரம்பித்தான். காரியமில வாயு அதிகரித்துப் போயிற்று. அவற்றை மாற்றிக் கொடுப்பது யார்? இதைத் தவிர வாகனங்கள் தொழிற்சாலைகள் விடுகின்ற புகைவேறு காற்றில் கலக்கின்றது. சூரியன் உமிழும் அலட்ரா வயலட் கதிர்களிடமிருந்து உயிரினங்களைப் பாதுகாக்கின்ற கேடயம் ஓசோன் படலம், இது தேய்ந்து கொண்டு வருகின்றது.

குளோரோஃப்ளூராக கார்பன் (C.F.C) என்று சொல்லப் படுகிற இரசாயனத்தை ரெப்ரிஜ்ரேட்டர், ஏர்கண்டிஷனர், தீயணைப்புக் கருவிகள் ஆகியவற்றில் குளிர்ச்சியை ஏற்படுத்துவதற்காக உபயோகிக்கிறோம். இதுதான் ஓசோனுக்கு எம் ஒரு மாலிக்யூல் C.F.C ஒரு இலட்சம் ஓசோன் மாலிக்யூலை அழிக்கக் கூடியதாம். இதற்கு மாற்றுப்பொருள் கண்டுபிடிக்க வேண்டும். இயற்கையோடு அனுசரித்துப் போகவேண்டியதன் அவசியத்தை இப்போது தான் தீவிரமாக உணர ஆரம்பித்திருக்கிறோம். அதற்காகத் தான் உலகத்தலைவர் எல்லோரும் ஒன்று கூடி ஆலோசிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

இந்த உலகத்திலே மரம், செடி, கொடிகள், மிருகங்கள், பறவைகள் எல்லாம் சௌக்கியமாக இருந்தால்தான் நாமும் சுகமாக இருக்க முடியும். இந்தியாவில் குஜராத் வடபகுதியில் ஆரவல்லிக் குன்றுச் சரிவின் மையத்தில், மிருகங்கள் பறவைகளுக்கென்றே ஒரு கோயில் இருக்கின்றது. அதில் பறவைகள், மிருகங்களின் சிற்பங்கள் தான் இருக்கின்றன. கற்பக்கிரகத்திலும் அதேசிலைகள் தான் அங்கே வணங்கப்படுகின்ற தெய்வங்கள், பறவைகளும், விலங்குகளும் தான் தெய்வீகக் கதைகளில் தெய்வங்கள், மிருகங்களையும், பறவைகளையும் வாகனமாக வைத்திருக் கின்றன என்று சொல்வதெல்லாம் எதற்காக? அவற்றின் மதிப்பை புரிந்துகொள்வதற்காகத் தான்.

அசோக மன்னர் சாலை ஓரங்களில் மரங்களை நட்டார். என்று சரித்திரத்தில் படிக்கிறோமே, அவர் என்ன விபரம் தெரியாமலா செய்தார்? மிருகங்களுக்கும் மருத்துவ மனைகள் நிறுவினார் அசோகர் என்று படிக்கிறோமே!

கி.பி. 17ம் நூற்றாண்டில் எழுதப்பட்ட நூல் நீதி சாரம். அது ஓலைச் சுவடியாக இருந்தது. தமிழ் நாடு தெல்லியல் துறையினர் தர்மபுரியில் அவை கண்டுபிடித்து எடுத்திருக் கிறார்கள். அதில் மரம் வளர்த்தால் நரகமில்லை என்று எழுதியிருக்கிறது. அந்த அளவுக்கு அப்பொழுதே தெரிந்து வைத்திருக்கிறார்கள். ஆல், அரசு, வேம்பு ஆகிய மரங்களை தெய்வமாக நினைத்து வழிபடுகின்ற பழக்கம் இப்போதும கூட உண்டு. இருந்தும் என்ன பிரஜோயனம்? உலகச் சுற்றுசூழல் மிகவும் கெட்டுப்போய்விட்டதாமே?

இனிமேல் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இயற்கையின் படைப்புக்களை அழிப்பதற்கு முயற்சிப் பண்ணக்கூடாது. சிலர் எதற்கும் கவலைப்படு வதில்லை. மிகவும் அலட்சியம்! அலுவலக நண்பர் ஒருவரிடம் நான் சீரியஸ்சாக "இப்படிபோய்க் கொண்டிருந்தால், ஒரு நாளைக்கு பெரிய பிரளயமே வந்துவிடும். கடல் கொந் தளிக்கும். சூறாவளி வீசும். எரிமலைவெடிக்கும். பூகம்பம் வரும்" என்று சொன்னேன். அவர் மிகவும் சாவகசமாக என்னைப் பார்த்து "அன்றைக்கு அலுவலகம் விடுமுறை விடுவார்களா சார்?" என்று கேட்டார்.

தென்கச்சி கோ, சுவாமிநாதன்

# சரத் அமுனுகமவின் கருத்தினால்
# அமைச்சரவை மட்டத்தில் சலசலப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆடசிப்பீடம் ஏறியதும் தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சர்கள் வெளி நாடு செல்வது தடுக்கப்படுமென பொதுஜனஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்த கருத்து அமைச்சரவையில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில், சரத் அமுனுகமவின் கருத்துப்பற்றி விவாதிக்க வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணா நாயக்க சரத் அமுனுகமவை கடுமையாக சாடியுள்ளார்.

இது பற்றி அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

அண்மையில் கூடிய ஐக்கிய தேசிய கட்சியின் நிறைவேற்றுக் குழு, அமைச்சர்கள் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐவரிற்கும் ஒழுக்க நெறிக் கோவை ஒன்றை உருவ்ாக்குவது பற்றி ஆராய்ந்தது உண்மை தான். ஆனால், அமைச்சர்களுக்கு எதிராக யோசனைகளோ அன்றி குற்றச்சாட்டுக்களோ முன்வைக்கப் படவில்லை.

எமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக ஒழுக்க நெறிக் கோவையொன்றை உருவாக்கிய பின்னர்,முன்னைய அரசின் மோசடிக் குற்றச்சாட்டுக் களுக்கு இலக்காகிய அரசியல் வாதிகளுக்கு எதிராக சட்டநட வடிக்கை எடுக்கப்போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அக்கூட்டத்தில் தெரிவித்திருந் தார் என்று அமைச்சர் ரவி கருணா நாயக்கா சுட்டிக்காட்டினார்.

(உ-10)

# தமிழ் -முஸ்லிம் முரண்பாடு களைய
# இருதரப்பு கூட்டுக் குழு நியமனம்

## பிரதிநிதிகளிடையிலான சந்திப்பில் இணக்கம்

(மூதூர்)

தமிழ்-முஸ்லிம் மக்களி டையே எதிர்காலத்தில் முரண்பாடு கள் ஏற்படும் இடத்தில் அதை புரிந்துணர்வு அடிப்படையில் தீர்த்து வைக்கும் பொருட்டு, விடுதலைப்புலிகளாலும் முஸ்லிம் தரப்பு பிரதிநிதிகளாலும் விரை வில் தலா நால்வரைக் கொண்ட குழு வினர் நியமிக்கப்படவுள்ளனர்.

நேற்று முன்தினம் திருகோண மலை மாவட்ட போர் நிறுத்தக்கண் காணிப்புக் குழுவின் பணிமனை யில் நடைபெற்ற முஸ்லிம் பிரதி நிதிகளுக்கும் - விடுதலைப்புலி களின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பினை அடுத்து இருதரப்பினராலும் வெளியிடப் பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூதூரில் அண்மையில் இடம் பெற்ற அசம்பாவிதங்களையடுத்து அப்பகுதியில் முழுமையான இயல்பு நிலையை தோற்று விக்கும் வகை யில் இச்சந்திப்பு நடைபெற்றது.

திருகோணமலை மாவட்ட போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் தலைவர் ஜோன் லேறன் தலைமை யில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்த்துறைப் பொறுப்பாளர் திலக், மூதூர் அல்சூல மஜிஸ்னிஸ தலைவர் மௌலவி என். எம். ஹரீம் ஆகியோர் கலந்து கொண் டனர்.

(உ-10)

# பிரதமர் ரணிலின் அழைப்பை ஏற்று
# உலக நாடுகளின் உதவிகள் குவிகின்றன

(கொழும்பு)

மாலைதீவு வர்த்தகம் மற்றும் கைத்தொழில் அமைச்சர் அப்துல் ஹசாமின், ஒரு தொகை நிவாரணப் பொருட்களுடன் நேற்று இலங்கை வந்தடைந் துள்ளார்.

இதேவேளை, நெதர்லாந்து அரசாங்கமும் நிவரணப்பணிகளுக் கென 70 லட்சம் ரூபாவினை வழங்கயுள்ளதாகவும் நெதர்லாந் தைச் சேர்ந்த அனர்த்த முகாமைத் துவ சிறப்பு நிபுணர் ஒருவர் இந்தப் பணிக்காக இலங்கை வந்துள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வினால் சர்வதேச நாடுகளுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளினை அடுத்தே பல நாடுகளும் இத்தகைய உதவிகளை வழங்கி வருகின் றன.

இதக்கிடையில், வெள்ள அனர்த்தங்களினால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்கும் பொருட்டு இந்தியா, மியன்மார், கொரியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் மருத்துவ நிபுணர்களை விரைவில் இலங்கைக்கு அனுப்பிவைக்கவுள் ளதாகவும் தெரியவருகிறது.

தறபோது ஜெனிவாவில் நடைபெறறு வரும் உலக சுகாதார ஸ்தாபனத் தின மாநாட்டில் கலந்து கொண் டுள்ள சுகாதார அமைச்சர் பீ. தயாரத்தனாவின் வேண்டு கோளை அடுத்தே இவர்கள் இலங் கைவரவிருப்பதாகவும்,

வெள்ளம் வடிந்த பின்னர் தொற்று நோய்கள் பரவும் அபாயம் உள்ளதால் அவற்றை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பது பற்றி இவர்கள் ஆராய்வர் எனவும் கூறப்படுகிறது.

(உ-10)

## இராசி பலன்

23.05.2003

(வைகாசி 9,வெள்ளி)

அட்டமி மு.இ. 11.23வரை

அவிட்டம் மு.ப.9.08வரை

இராகுகாலம் 10.22 - 11.52

சுபநேரம் 5.52 -7.22

**மேடம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, தாழ்ந்த சுபாவம், வாக்குமேன்மை, அதிக செலவு.

**இடபம்**
சிறுவியாதி, திடீர் நன்மை, ரோக நிலை, கோபப்படுதல்.

**மிதுனம்**
கட்டுப்பாடு,அதிக செலவு, காரிய சித்தி,நோய் குணமடைதல்.

**கடகம்**
தெய்வ சிந்தை, திடீர் நன்மை, சிறுவியாதி, நண்பர்கள் உதவி.

**சிங்கம்**
எடுத்த காரியம் கைகூடும், கற்பனை மிகுதி, இடமாற்றம்,குடும்பக் கவலை போசனசுகம்.

**கன்னி**
தேக நலன், நண்பர்கள் விரோதம், அதிக செலவு, மேன்மை.

**துலாம்**
மனமகிழ்ச்சி, தொழில் திருப்பம், பெருமையடைதல், கற்பனை மிகுதி.

**விருச்சிகம்**
இலட்சுமிகரம், மனக்கிலேசம், காரிய சித்தி, உறவினர் சந்திப்பு.

**தனுசு**
தூரதேசச் செய்தி, புதிய திட்டமிடல், அமைதிக் குறைவு, போசன சுகம்.

**மகரம்**
கடுமையான பிரயாசை, தெய்வதரி சனம், கலந்துரையாடல், பிரயாணம்.

**கும்பம்**
பிரயாணம், தொழில் முன்னேற்றம், நிலைமாற்றம், தெய்வசிந்தை.

**மீனம்**
பயந்த சுபாவம், மாதர் நட்பு, அதிக செல்வு, மாதாசுகம்.

(புழையநேரப்படி கணிக்கப்பட்டது)

வளவன்.

# முல்லை முகாம் தாக்குதல்
# 1157 படையினர் மாயம்

## பாதுகாப்பு அமைச்சர் தகவல்

(கொழும்பு)

முல்லைத்தீவு இராணுவ முகாம் தமிழீழ விடுதலைப்புலி களின் தாக்குதலுக்கு உள்ளான போது 67 படையினர் பலியான துடன் ஆயிரத்து 157 பேர் காணாமல் போயுள்ளனர். அத்துடன் 800 பேர் ஊனமுற்றனர் என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள் ளார்.

நேற்றுமுன்தினம் பாராளுமன்றத் தில் பொ.ஐ.மு எம்.பி. ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே எழுப்பிய கேளவி ஒன்றுக்கு பதில் அளிக்கை யிலேயே இத்தகவலை வெளியிட் டார்.

முல்லைத்தீவு இராணுவ முகாம், தமிழீழ விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டபோது, உயிரிழந்த படையினரின் எண் ணிக்கை, காணாமல்போனோரின் எண்ணிக்கை, ஊனமுற்றோரின எண்ணிக்கை மற்றும் இராணுவத் தரப்பில் இழக்கப்பட்ட யுத்த உபகரணங்களின் எண்ணிக்கை என்பவற்றை தெரிவிக்குமாறு பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப பனவை ஜெயராஜ் பொர்னாண்டோ புள்ளே எம்.பி. கேட்டிருந்தார்.

இதற்குப் பதிலளித்த பாதுகாப்பு அமைச்சர், இத்தாக்குதலின் போது அங்கு இழக்கப்பட்ட யுத்த உபகரணங்களின் பெறுமதி மதிப்பிடப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

(உ-8)

## விபத்தில் சிக்கி சிறுவன் படுகாயம்

(சில்லாலை)

ஆட்டோவும், சைக்கிளும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் அதில் அகப்பட்ட பாடசாலைச் சிறுவன் பலத்த காயங்களுக்குள் ளானான்.

பண்டத்தரிப்பு பிரான்பற்று வீதியில் கடந்த செவ்வாயன்று நடந்த இவ்விபத்தில் சற்குணம் சசிகரன் (வயது 13) என்ற சிறுவனே தலையில் பலத்த காயங்களுக்குள் ளான நிலையில் சங்கானை வைத்திய சாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக் காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளான்.

(உ-58)

# ஒப்பந்த கோட்பாடுகளுக்கு அமைய பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்குக!

## சமாதான நீதவான் சங்கம் பிரதமரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

ஏற்றுக்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தக் கோட்பாடுகளுக்கு அமைய சமாதானப் பேச்சுவார்த்தைகளைத் தொடருமாறு கோரி யாழ். மாவட்ட சமாதான நீதவான் சங்கம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளது.

19ஆம் திகதியிடப்பட்ட அக் கடிதத்தில குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி நடைபெற்று வந்த பேச்சுவார்த்தைகளில் தீர்மானித்த விடயங்களை துரிதமாக செயற்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். எமது நாட்டில் கடந்த 20 வருடங்களாக நிகழ்ந்த இனக் கலவரங்களால் எமது மக்கள் சொல்லொணா வேதனைகளை அனுபவித்து வந்துள்ளனர் என்பது அனைவரும் அறிந்ததே. இனியும் அவ்வாறானதோர் யுத்தம் நிகழ்வதை யாரும் விரும்பவில்லை.

கடந்த 6 சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயங்களை செயற்படுத்தாது உள்ளமை காரணமாக மேற்கொண்டு நடைபெறவிருக்கின்ற பேச்சுக்களில் பங்கு கொள்வதில்லை என விடுதலைப்புலிகள் இயக்கம் தீர்மானித்துள்ளது.

இந்நிலையில் சகஜ நிலையை ஏற்படுத்துவது, இனங்களுக்கிடையே பரஸ்பர நம்பிக்கையை வளர்ப்பது ஆகியனவையே பிரதானமானதும் அதி முக்கியமானதும் ஆகும்.

எனவே சமாதானப் பேச்சுக்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களை செயற்படுத்தி விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுத்துவதற்குரிய வழிகளை மேற் கொண்டு எம் நாட்டில் சாந்தியும் சமாதானமும் என்றென்றும் நிலவ ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்குமபடி கேட்டுக்கொள்கின்றோம்.(உ-8)

# பல்கலை மாணவியுடன் அங்க சேஷ்டை புரிந்த குடும்பஸ்தர் மாட்டினார்

(கொழும்புத்துறை)

வீதியால் நடந்து சென்ற பல்கலைக்கழக மாணவியுடன் அங்க சேஷ்டை புரிந்த குடும்பஸ்தர் நையப் புடைக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் காலை 7 மணியளவில் இந்துக்கல்லூரி வீதியால் நடந்து சென்ற பல்கலைக் கழகமாணவியுடன் மூன்று பிள்ளைகளின் தந்தையான 43 வயதுடைய மேற்படி நபர் அங்கசேஷ்டை புரிந்ததை அடுத்து மாணவி கூச்சலிட்டுள்ளார். அங்கு கூடிய மக்கள் மாணவியை மீட்டதுடன், கலாசாரத்தைப்பேணும் இளைஞர்களிடம் அந்நபரைப் பிடித்துக் கொடுத்துள்ளனர்.

கலாசாரத்தைப்பேணும் இளைஞர்களால் நையப்புடைக்கப்பட்ட நபர்,விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டு கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். (உ-51)

# வெள்ளத்தால் பாதிப்புற்றோருக்கு வேண்டிய உதவி செய்ய ஜப்பான் தயார்

(கொழும்பு)

தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்தங்களினாலும், மண்சரிவினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்யும் வகையில் 1 கோடி 60 இலட்சத்திற்கும் அதிகமான பணத்தை வழங்க ஜப்பான் முன்வந்துள்ளது.

எதிர்காலத்தில் இலங்கைக்கு மேலும் பல உதவிகளைத் தாம் செய்யப்போவதாகவும் ஜப்பான் நாட்டு வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், மாலைதீவு அரசும் இலங்கையில் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முன்வந்துள்ளது.

இதற்கமைய மாலைதீவு வர்த்தக அமைச்சர் அப்துல் ஹசம் இலங்கைக்கு விஜயம் செய்து நிவாரணப் பணிகளை ஆராயவுள்ளார்.

இதேவேளை, தென்னிலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ அமெரிக்கா, நோர்வே, பிரிட்டன் இந்தியா போன்ற பல நாடுகள் முன் வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-10)

# தகுதிகாண் ஆசிரியர் தெரிவு விண்ணப்பம் கோரல் விரைவில்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத் தமிழ்மொழிப் பாடசாலைகளில் கடமையாற்றவென க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்தவர்களில் இருந்து ஆயிரம் தகுதிகாண் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்குரிய விண்ணப்பம் கோரும் வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படவுள்ளது.

இன்று அல்லது எதிர்வரும் 30ஆம் திகதி இவ்வறிவித்தல் வெளிவரவிருப்பதாகவும் இவ்வறிவித்தலில் மாதிரி தயாரிக்கப்பட்டு சுதந்திர பொதுச் சேவைக்குழுவின் கல்விப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் மாகாணக் கல்வி அமைச்சின் உயர்அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

க.பொ.த. உயர்தரத்தில் சித்திபெற்று பல்கலைக்கழகம் மற்றும் கல்விக் கல்லூரிகளுக்கு தெரிவாகாதோரிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டு போட்டிப்பரீட்சை மூலம் வழங்கப்படவுள்ள இந்நியமனம் உலக வங்கியின் சிபாரிசுக்கு அமைய வழங்கப்படும் மூவாயிரம் ஆசிரியர் நியமனங்களில் ஒரு பகுதியாகும்.

இத்தகைய நியமனங்கள் ஆயிரத்து 250, 1999.11.11 இல் கோரப்பட்ட விண்ணப்பத்திற்கமைய 2000.07.15இல் 904 பேருக்கும், 2003.03.24இல் 346பேருக்கும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, பட்டதாரி ஆசிரியர் நியமனம் 2002.06.15 இல் 721 பேருக்கும், 2003-01-03இல் 170 பேருக்கும் வழங்கப்பட்டு கடமை ஏற்காதோருக்கும் தற்போது நியமனங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இதேபோன்று தொண்டர் ஆசிரியர் நியமனமும் சிபார்சு செய்யப்பட்ட ஆயிரத்து 197 பேரில் தகுதியானோருக்கு விரைவில் வழங்குவதறகான நடவடிக்கைகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (உ-8)

# வெளிநாட்டு உதவிகோர அமைச்சரவை தீர்மானம்

(கொழும்பு)

நாட்டின் தென்பகுதியில் உள்ள பல மாவட்டங்களிலும் உயிர் சேதங்களையும் மற்றும் பொருட் சேதங்களையும் ஏற்படுத்தியிருக்கும் இயற்கை அனர்த்தங்கள் தொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்து கொள்ள வில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அனர்த்தக் கண்காணிப்புக் குழு பற்றிய தமது யோசனைகளை ஜனாதிபதி கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

அதன்படி பிரதமரின் அனர்த்தக் கண்காணிப்புக் குழு பற்றிய யோசனைக்கு ஜனாதிபதி உடன்பட்டிருக்கிறார் என்றும் சிரேஷ்ட அமைச்சர் தலைமையில் உப குழு ஒன்றை அமைக்க வேண்டும் எனவும் அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மேற்படி பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து மக்களை முழுமையாக மீட்டெடுப்பதற்கு சர்வதேச நாடுகளின் உதவிகளைக் கோரவும் அமைச்சரவை நேற்று முன் தினம் முடிவுசெய்துள்ளது.

அத்துடன், இரத்தினபுரி மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்து வருவதாக கூறப்படுகின்றபோது அப்பகுதி மக்களுடன் தொடர்பு கொண்டு அறியமுடியாதுள்ள நிலை குறித்தும் அமைச்சரவைக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இத்தகைய இயற்கை அனர்த்தங்களை குறைக்கும் வழிவகைகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக தனியான உப குழுவொன்றை நியமிக்குமாறும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யோசனை கூறியுள்ளார். (உ-10)

# க.பொ.த (உ/த) பரீட்சை மீண்டும் ஒத்திவைப்பு

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் எஞ்சியிருந்த பாடங்களுக்கான பரீட்சைகள் மீண்டும் அடுத்த வார இறுதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

தென்னிலங்கையில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் கடந்த 19ஆம், 20ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த பரீட்சைகளை அகில இலங்கை ரீதியாக எதிர்வரும் 24,25ஆம் திகதிகளில் நடத்துவதென முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

எனினும் மேற்படி வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் வழமையான நிலைக்கு திரும்பாதமையினால் மீண்டும் இப்பரீட்சைகளை ஒத்திவைக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் 31ஆம் திகதியும் ஜூன் மாதம் 1ஆம் திகதியும் இப்பரீட்சைகளை நடத்துவதற்கு கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளது. இதுபற்றி கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கருத்து வெளியிடுகையில்,

ஏற்கனவே விநியோகிக்கப்பட்ட அனுமதி அட்டைகளையே மேற்படி திகதிகளில் நடைபெறும் பரீட்சைகளிற்கு கொண்டுவரவேண்டும் என்று தெரிவித்துள்ளார். (உ-10)

## விபத்தில் இளைஞர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)

நேற்று முன்தினம் முல்லைத்தீவு பரந்தன் பிரதான வீதியில் இடம்பெற்ற மினிபஸ் மிதிவண்டி விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் பி.ப. 2 மணியளவில் தர்மபுரம் வைத்தியசாலைச் சந்தியில் இடம்பெற்ற விபத்தில் துவிச்சக்கரவண்டியில் சென்றவர்களில் ஒருவரான மயில்வாகபுரம் பிரபந்தனாறு விஸ்வமடுவைச் சேர்ந்த சி.குகதாசன் (வயது 19) அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

அதே இடத்தைச் சேர்ந்த த.தயாளன் (வயது 16) படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி விபத்துக் குறித்து விஸ்வமடு காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (உ-8)

## சங்கீத-நடன பரீட்சைகள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

இலங்கைப் பரீட்சை திணைக்களத்தால் எதிர்வரும் 31ஆம் திகதி நாடளாவிய ரீதியில் நடத்தப்படவிருந்த தேசிய நடனம் மற்றும் சங்கீத பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் நாயகம் மகிந்த விஜயசிறி அறிவித்துள்ளார்.

இந்தப் பரீட்சைகள் நடைபெறும் திகதி பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் ஆணையாளர் நாயகம் மகிந்த விஜயசிறி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, நாளைய தினம் நடைபெறவிருந்த மேல்மாகாண அரசாங்க சேவை மாகாண கல்வி அமைச்சின் முகாமைத்துவ உதவி அதிகாரிக்கான பரீட்சையும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## உடற்பயிற்சிப் போட்டி

(கோப்பாய்)

கோப்பாய்க்கோட்ட பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப்போட்டி நாளை காலை 9 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (உ-79)


31ம் நாள் நினைவலைகளும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மழலையாய் 1948 - 12 - 26



தெய்வமாய் 2003 - 04 - 27

அமரர் அன்னலிங்கம் - விஸ்வலிங்கம்

(நாடகக் கலைஞரும், நாட்டுப்பற்றாளரும் V.T.A விஸ்வா)

26.05.2003

27.04.2003 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத்தலைவர் அமரர் அன்னலிங்கம் விஸ்வலிங்கம் அவர்களின் ஆத்ம சாந்திக் கிரிகைகள் எதிர்வரும் 24.05.2003 அன்றும், வீட்டுக்கிருத்தியம் 26.05.2003 அன்று அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அச்சமயம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

குறிப்பு: இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று பங்கு பற்றி சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

பூங்கனிச்சோலை,
இராமலிங்கம் வீதி,
முடமாவடி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

[C/6209]


## தரம் 09 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பரிசுகள் ரூபா 750/= 500/= 250/=
மற்றும் சான்றிதழ்களும்

விடயம் : "தாய் அன்பிற்கு நிகரேது"

சொற்கள்: 175-200 வரை

கட்டுரைகள் 25.05.2003 ற்கு முன்னதாக "மாணவர் கட்டுரைப் போட்டி" வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

### இணைக்கும் பத்திரம்

**கட்டுரைப் போட்டி இல-3**

மாணவர் முழுப் பெயர் :------------------------
பாடசாலை :------------------------
:------------------------
கற்கும் தரம் :------------

உறுதிப்படுத்துகிறேன்

------------------
ஆசிரியர்

# அல்ஜீரியாவில் பூமி அதிர்ச்சி 500ற்கும் அதிகமானோர் பலி

## நூற்றுக்கணக்கினர் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கித் தவிப்பு

(அல்ஜியர்ஸ்)

**அல்ஜீரியாவில் நேற்று முன்தினம் திடீரென ஏற்பட்ட பூமி அதிர்ச்சியில் 500ற்கும் அதிகமானோர் பலியாகியுள்ளதுடன் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.**

6.7 ரிச்சர்ட் அளவில் பதிவான இப்பூமி அதிர்ச்சி அல்ஜீரியாவின் றூய்பா நகரை கடுமையாக தாக்கியுள்ளது.

இதனால் இப்பகுதியிலுள்ள கட்டடங்கள் பல தரைமட்டமாகியுள்ளன. இந்த இடிபாடுகளுக்குள் 100ற்கும் அதிகமானோர் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களையும், காணாமல் போனவர்களையும் தேடி இவர்களது உறவினர்கள் கண்ணீருடன் வீதிகளில் அலைவதாக சர்வதேச செய்தி ஊடங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இவர்களை மீட்கும் பணியில் மீட்புப் பணியாளர்களும், தொண்டர்களும் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

அல்ஜீரியாவின் தலைநகர் அல்ஜியர்சிலிருந்து 30 கிலோ மீற்றர் கிழக்கே றுய்பா நகர் அமைந்துள்ளது. பூமி அதிர்ச்சி ஏற்பட்ட சமயம் தமது உயிர்களை பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில் றூய்பா நகர் மக்கள் அல்ஜியர்ஸ் நகரை நோக்கி அவசர அவசரமாக நகர்ந்துள்ளனர்.

இதேவேளை, அல்ஜீரியாவின் மிகவும் அபிவிருத்தி அடைந்த நகராகவும் வசதிபடைத்தவர்கள் வாழும் இடமாகவும் றுய்பா நகர் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இச்சம்பவம் குறித்து கவலை தெரிவித்த அல்ஜீரிய அதிபர் இச்சம்பவத்தின் போது உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு அனுதாபச் செய்தியையும் விடுத்துள்ளார்.

இதேவேளை, அங்குள்ள உதவி வழங்கும் நிறுவனங்கள் இந்த இயற்கை அனர்த்தத்தில் சிக்கியவர்களுக்கு தங்குமிட வசதி, உணவு வசதி மற்றும் பொருள் உதவிகளை வழங்க முன்வந்துள்ளன. (உ-2)

## குட்டி வீரப்பன் பிடிபட்டான்

(புதுடில்லி)

சந்தனக்கடத்தல் வீரப்பனின் நெருங்கிய தோழனான குட்டி வீரப்பன் பிடிபட்டுள்ளான்.

சேலம் அருகேயுள்ள மேற் காட்டில வைத்து தமிழக காவல் துறையினர் குட்டி வீரப்பனை நேற்றுக் கைது செய்துள்ளனர்.

பலபேரைக் கொன்ற குட்டி வீரப்பனை கடந்த 10 ஆண்டுகளாக தமிழக பொலிஸ் அதிரடிப் படையினர் தேடிவந்தனர். (உ-2)

## கடத்தல்காரர் கைவரிசை தொடர் குண்டுவெடிப்பில் இருவர் உயிரிழப்பு

(யாங்கூன்)

மியான் மாரின் எல்லைப்புற நகரான டெச்சிலெக்கில் இடம் பெற்ற தொடர் குண்டு வெடிப்பில் இருவர் பலியாகியுள்ளனர்.

நேற்று முன்தினம் அதிகாலை சக்தி வாய்ந்த குண்டுகள் வெவ்வேறு இடங்களில்பயங்கரமான சத்தத்துடன் வெடித்துச் சிதறியதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் நிகழ்ந்த இடங்களில் ஒன்றான தாய்லாந்து எல்லையிலிருந்து 500 மீற்றர் தொலைவில் உள்ள வாயு தயாரிக்கும் நிலையம் ஒன்றின் மீதுஇடம்பெற்ற தாக்குதலிலேயே மேற்குறித்த இருவரும் உடல் சிதறி பரிதாபகரமாக பலியாகியுள்ளனர்.

மற்றொரு குண்டு வெடிப்பில் மியான்மார் மன்னரின் சிலை முற்றாக வெடித்துசிதறியுள்ளது.

இச்சம்பவங்களை அடுத்துஅங்கு கடும் பதற்றம் நிலவி வருகின்றது. மியான்மார்- தாய்லாந்து எல்லைப்பகுதிகளில் நடந்து வரும் போதைப் பொருள் கடத்தலுக்கு எதிரான மியான்மார் அரசின் நடவடிக்கைகளினால் கோபம் அடைந்துள்ள போதைப் பொருள் வர்த்தகர்களே இச்சம்பவத்தை நிகழ்த்தியிருக்கக்கூடும் என சந்தேகம்வெளியிடப்பட்டுள்ளது. (உ-2)

## அமைதிப் பேச்சை ஆரம்பிக்க நிபந்தனை விதிக்கக்கூடாது

### இந்தியாவிடம் பாக். கோரிக்கை

(இஸ்லாமபாத்)

அமைதிப் பேச்சுவார்த்தைக்கு எந்தவொரு முன்நிபந்தனையினையும் விதிக்கக் கூடாது என்று பாகிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் குர்ஷீத் முகமது கசூரி இந்தியாவிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தியா-பாகிஸ்தானிடையே நாகரிகமானதொரு உறவு ஏற்பட வேண்டுமெனில் இரு நாடுகளும் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தையினையே நடத்த வேண்டும் என்று பி.பி.ஸி.யின் ஆசிய டுடே நிகழ்ச்சிக்கு பேட்டியளிக்கையில் கசூரி தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் பேட்டியளிக்கையில், பாகிஸ்தானுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை நடத்த இந்தியா முன்வந்தால், அதன்பிறகு எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை முழுமையாக நிறுத்தப் பாகிஸ்தான் நிச்சயம் முயற்சிக்கும் என்றார்.

காஷ்மீர் தீவிரவாதிகள் குறித்து கருத்துத் தெரிவிக்கையில், ஓர் அர்த்தமுள்ள பேச்சுவார்த்தை இரு நாடுகளுக்குமிடையில் ஆரம்பிக்கப் பட்டால் தீவிரவாதிகளுக்கு நிச்சயம் சுதந்திரம் கிடைக்கும்.

எதற்காக அவர்கள் தங்களை அழித்துக் கொள்கிறார்கள்? இவர்களுக்கென நீண்டதொரு வாழ்க்கை காத்துக் கொண்டிருக்கிறது. இந்தியாவும் பாகிஸ்தானும் ஒன்றிணைந்து உருவாக்கும் ஏற்பாட்டில் இவர்களது எதிர்பார்ப்புகளுக்கு நிச்சயம் இடம் அளிக்கப்படும் என்று கூறினார்.

இதேவேளை, ஜம்மு-காஷ்மீரில் இயங்கிவரும் பயங்கரவாத இயக்கங்களின் பின்னணியில் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. உள்ளது என்ற இந்தியாவின் குற்றச்சாட்டினை கசூரி வன்மையாகக் கண்டித்துள்ளார். (உ-2)

## மகனின் கைது குறித்து கருணாநிதி கண்டனம்


### இயலாத்தனம் எனவும் விமர்சனம்

(புதுடில்லி)

தி.மு.க தலைவர்களில் ஒருவரும் தமிழகத்தின் முன்னாள் அமைச்சருமாகிய த.கிருஷ்ணனின் படுகொலை தொடர்பில் தனது மகன் அழகிரி கைது செய்யப்பட்டமை குறித்து கட்சியின் தலைவர் கருணாநிதி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

உண்மையான குற்றவாளிகளை கைது செய்வதை விடுத்து தி.மு.க மீது குற்றம் சாட்டும் நோக்கிலேயே அழகிரி கைது செய்யப்பட்டுள்ளார் என்று இவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொல்லப்பட்ட கிருஷ்ணனின் குடும்பத்தவர்கள் கூறிய தகவலின் பின்னணியில் மதுரை காவல் துறையினர் அழகிரியை நேற்று முன்தினம் கைது செய்திருந்தனர்.



அழகிரியுடன் இவரது தீவிர ஆதரவாளரான முன்னாள் தி.மு.க நாடாளுமன்ற உறுப்பினர் சிவராமனும் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

## கால்நடைகளுக்கு மூளைக்காய்ச்சல்

(ஒட்டாவா)

மாட்டிறைச்சியினை ஏற்றுமதி செய்யும் நாடுகளில் முன்னணி இடத்தை வகிக்கும் கனடாவில் முதல் தடவையாக கால்நடைகளிற்கு ஒரு வகை மூளைக்காய்ச்சல் நோய் ஏற்பட்டுள்ளது.

கனேடிய விவசாயத்துறை அமைச்சு இதனை ஊர்ஜிதம் செய்துள்ளது.

கனடா அல்பாட்டா பகுதியில் கால்நடைகள் இந்த நோயால் பீடிக்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இறைச்சி ஏற்றுமதியில் முக்கிய பங்கு வகிக்கும் இந்தப் பகுதியில் 25 இலட்சத்திற்கும் அதிகமான கால்நடைகள் உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-9)

## அமெரிக்காவின் குற்றச்சாட்டை ஈரான் முற்றாக மறுப்பு

(தெஹறான்)

அல்கெய்டா உறுப்பினர்களுக்கு தங்க இடமளித்திருப்பதாகவும் அவர்களுக்கு உதவி வழங்கி வருவதாகவும் ஈரான் மீது அமெரிக்கா தெரிவித்திருந்த குற்றச்சாட்டை அந்நாடு மறுத்துள்ளது.

அத்துடன் ஒஸாமா பின்லேடனின் அல்கெய்டா அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் சுமார் 500 பேரை தாம் தடுத்து வைத்திருப்பதாகவும் ஈரான் தெரிவித்துள்ளது.

இவ்வாறான நிலையில் அமெரிக்காவின் குற்றச்சாட்டை அர்த்தமற்ற தொன்று என்று ஈரானிய அரசாங்கப் பேச்சாளர் அப்துல்லா ரம்ஸ்சன்சாவ் குற்றம் சாட்டியுள்ளார்.

எனினும் அல்கெய்டா உறுப்பினர்கள் ஈரானில் தங்கியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது என்றும் அவர்களுக்கும் சவுதி அரேபிய தொடர் குண்டுவெடிப்புச் சம்பவத்திற்கும் தொடர்பு உண்டு என்றும் அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ற் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-9)

## பாகிஸ்தான்-இந்திய உறவைக் கட்டியெழுப்ப 5 அம்சத் திட்டம் தயார்

(புதுடில்லி)

பாகிஸ்தானுடன் சுமுகமான உறவை ஏற்படுத்த 5 அம்சத் திட்டமொன்று வகுக்கப்பட்டிருப்பதாக இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங்க கூறியுள்ளார்.

இதில் இரு நாடுகளும் தூதுவர்களை நியமிப்பது மற்றும், வான்வெளித் தடைகளை நீக்குவது ஆகிய விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக லண்டனில் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்சிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையிலான உறவைக் கட்டியெழுப்புவது, வீதிப் போக்குவரத்தை மீண்டும் ஆரம்பிப்பது, விமானப் போக்குவரத்தை ஆரம்பிப்பது, விளையாட்டு உறவுகளை மீண்டும் ஏற்படுத்துவது போன்றன ஐந்து அம்சத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானிற்கு இந்தியா ஏற்கனவே தூதுவரை நியமித்துள்ளது. பாகிஸ்தான் விமானங்கள் இந்திய வான்வெளியில் பறக்க விதிக்கப்பட்ட தடை விரைவில் நீக்கப்படும்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் படிப்படியாக ஆரம்பிக்கப்படும். இதன் அடிப்படையில் இரு நாடுகளின் தலைவர்களிற்கும் இடையிலான சந்திப்பு விரைவில் நடைபெறும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-9)

## குற்றப் பத்திரிகை தாக்கல்

(புதுடில்லி)

பொடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இடது சாரிப் போராளிகள் மீதான குற்றப்பத்திரிகை கடந்த செவ்வாயன்று பொடா நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்த 26 இடது சாரிப் போராளிகளும் விசாரணைக்காக கடந்த செவ்வாயன்று பொடா நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

அப்போது அவர்கள் மீதான குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்த பொலிஸார் குற்றவாளிகளைத் தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

ஆயுதப் பயிற்சி மற்றும் தேச விரோதச் செயல்களில் ஈடுபட்டதாக இந்த இடது சாரிப் போராளிகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (உ-9)

## கியூபா மீதான குற்றச்சாட்டு பிரேரணை வாபஸ்

(வாஷிங்டன்)

மனித உரிமைகளை கியூபா மீறியுள்ளது என்று குற்றம் சாட்டும் பிரேரணை ஒன்றை மாநிலங்கள் அமைச்சின் கூட்டத்தில் முன்வைக்க விருந்த அமெரிக்கா அதனை மீண்டும் வாபஸ் பெற்றுள்ளது.

அங்கத்தவர்களிடமிருந்து போதிய ஆதரவை திரட்ட முடியாத காரணத்தால் இக்குற்றப்பிரேரணை வாபஸ் பெறப்பட்டுள்ளது. கனடா, சிலி ஆகிய நாடுகள் முன்னர் இப்பிரேரணைக்கு ஆதரவு வழங்கியிருந்த போதிலும் இவ்விடயத்தில் ஒவ்வொரு நாடும் தனது சொந்த விருப்பின் அடிப்படையில் நடந்து கொள்ளலாம் என்று முன்வைக்கப்பட்ட கருத்தை தொடர்ந்தே தமது ஆதரவுகளை இவை நீக்கிக் கொண்டுள்ளன.

இதனையடுத்து, அமெரிக்காவினால் இப்பிரேரணை வாபஸ் பெறப்பட்ட போதிலும் மீண்டும் இந்தப் பிரேரணை முன்வைக்கப்படலாம் என்றும் இதற்கு ஆதரவாகவோ, எதிராகவோ அங்கத்துவ நாடுகள் வாக்களிக்க முடியும் என்றும் அமெரிக்காவினால் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (உ-2)

# புதிய அணுகுமுறையுடன் புனரமைப்பு திட்டங்களை அமுலாக்க உரிய தருணம் இதுவே

## நியாப் திட்டஆய்வுப் பட்டறையில் அரச அதிபர்

(தென்மராட்சி)

இடத்துக்கு இடம் காலத்துக்குக் காலம் இருக்கின்ற சூழலை அடிப் படையாகக் கொண்டுதான் எமது அபிவிருத்தித் திட்டங்களை, புனர மைப்புத் திட்டங்களை நாம் வழிநடத் திச் செல்லவேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் நேற்று யாழ். அரச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நியாப் திட்டம் பற்றிய ஆய்வுப் பட்டறையில் உரையாற்றும போது தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தின் வவுனியா வளாக வணிகக் கல்விப் பீடாதிபதி இ.நந்தகுமாரின் நெறிப்படுத்தலில் நடைபெற்ற இப் பட்டறையில் திருகோணமலையிலி ருந்து நியாப் திட்ட உயர்மட்ட அதி காரிகள் சமுகமளித்திருந்தனர்.

அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் அங்கு தொடர்ந்து உரையாற்றும்போது,

20 வருடகால யுத்த அனர்த்தங் கள் காரணமாக இந்த மாவட்டத் தின் பல்வேறு துறைகள், பல்வேறு அளவிலே பாதிக்கப்பட்டு இருக்கின் றன இவ்வாறு யுத்த அனர்த்தங் களினால் பாதிக்கப்பட்ட துறைகளின மீள் கட்டுமானங்களை எவ்வாறு செய் வது என்பது பற்றி நாம் தீவிரமாக ஆராய வேண்டும்.

இவற்றினை முன்னர் இருந்த நிலைக்கு மீளக் கொண்டுவருவதா அல்லது, எதிர்கால மக்களுக்கான தேவைகளுக்கு ஏற்ப இலங்கை யிலும் உலகலாவியரீதியிலும் ஏற்ப டுகின்ற அபிவிருத்தி நன்மைக் கேற்ப, இந்தப் புனரமைப்பு நடவடிக்கை களை கொண்டுசெல்லவேண்டுமா என் பது பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

யாழ். மாவட்டத்திலே நீருக்கான தேவையும் அதனுடைய பயன்பாடு பற்றியும் நீண்டகாலமாக அறிஞர் களாலும் வல்லுநர்களாலும் பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வரு கின்றன. இந்த மாவட்டத்திலே உச்ச மாக வாழக்கூடிய மக்களுடைய தொகை எவ்வளவாக இருக்கவேண் டும், இங்குள்ள நீர்ப்பாசனநடை முறைகள் குடிநீருக்கான நீர் விநி யோகநடைமுறை எவ்வாறு அமைதல வேண்டும் என கடந்த இருபது வருடங்களாக இத்துறைகளிலேயே துறைபோனவர்களால் பல் வேறு கருத் துக்கள் வைக்கப்பட்டன.

ஆனால், இருபது வருடகாலமாக ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களால் அவற்றுக்குச் செயலுருவம் கொடுக்க முடியாத நிலையில் இருந்தது. அததுடன், யுத்த அனர்த்தங்களினால் நீரைச் சேகாித்து வைக்கக்கூடிய குளங்கள் ஏற்கனவே அமுலாக்கப்பட் டிருந்த உவர் நீர்த் தடுப்பு அணை கள், கிணறுகள் என்பன சீரழிந்த நிலையில் உள்ளன.

இந்த வகையில், நாளைய தேவை களுக்கு ஏற்ப புதிய தொழில் நுட்ப அடிப்படையில் புனரமைப்புத் திட் டங்கள் கட்டியெழுப்பப்பட வேண்டிய சந்தர்ப்பம் உருவாகியுள்ளது. அதன் அடிப்படையில் இன்று 'நியாப் 'திட் டம் உருவாக்கப்பட்டுள்ளது. இது ஒரு புனரமைப்புத்திட்டம் மாத்திரமே. இந்தத்திட்டத்தை நாங்கள் அமுல் படுத்தும்பொழுது எமது மனதிலே வேறும்பல திட்டங்கள் உருவாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்திலே உருவாக்கப்படவுள்ள புனரமைப்பு, அபிவிருத்தித்திட்டங்களுக்கு ஒரு அத்திபாரமாகவும்,உந்து சக்தியாக வும் நியாப் திட்டம் அமையவேண் டும. அந்த வகையில் இது ஒரு வழி காட்டியாகவும் இருக்கவேண்டும். யாழ்ப்பாண மாவட்டத்துக்கான திட் டங்கள் ஏனைய மாவட்டங்களின் திட்டங்கள் போன்று அமையமாட் டாது எனக் குறிப்பிட்டார்.

இவ்ஆய்வுப் பட்டறையில் நியாப் திட்டத்தின் கோட்பாடுகளும் செயற் பாடுகளும் பற்றி நியாப்பின் தொழில் நுட்பப் பணியாளர் எந்திரி சீ.மனோ க்ரன், நியாப் திட்ட முகாமையாளர் எஸ். இராமநாதன் ,யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேரா சிரியர். பொ. பாலசுந்தரம்பிள்ளை, விவ சாய பீடாதிபதி எஸ்.இராசதுரை, பொற யியலாளர் பொ.விக்கினேஸ்வரன் ஆகி யோர் உரையாற்றியதுடன் ,பொருண் மிய மேம்பாட்டுக்கழப் பிரமுகர்கள், முனனணி விவசாயிகள் ஆகியோ ரும் கலந்துகொண்டனர்.(உ-77,7)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தீவக கல்விவலயத்தில் உள்ள யா/அனலைதீவு சதாசிவ மகா வித் தியாலய பாடசாலை அதிபர் பதவி வெற்றிடத்துக்கு தகுதியானவர்கள் விண்ணப்பங்களை 31.05.2003ம் திகதிக்கு முன்னர் தீவக கல்வி வலயத்திற்கு அனுப்பிவைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் பொ. வேணுகோபால் கேட்டுள்ளார். (உ)

## அ.அட்டைகள் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

கோபாலப்பிள்ளை மயூரி என்ப வரது தேசிய மற்றும் விசேட அடை யாள அட்டைகள் கண்டெடுக்கப் பட்டு யாழ். போதனா வைத்திய சாலை காரியாலயத்தில் ஒப்படைக் கப்பட்டிருப்பதாகவும் அதனை உரி யவர் பெற்றுக்கொள்ளலாம் என்றும் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ)





சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்ற, இரண்டாவது உலக இந்து மாநாட்டு எழுச்சி விழாவில் எடுக்கப்பட்ட படங்கள்.

# நாடாளுமன்ற பதிவேட்டில் இருந்து மகேஸ்வரனின் உரை நீக்கம்

## வழங்கிய அனுமதியை வாபஸ் பெற்றார் சபாநாயகர்

(கொழும்பு)

இந்து சமய விவகார அலுவல் கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் நேற்று முன்தினம் பாராளுமன்றில் ஆற்றிய



உரையினை முற்றாக நாடாளுமன் றப் பதிவேட்டில் இருந்து (ஹன்சாட்) நீக்கவேண்டும் என்று சபை முதல் வரும் நீதி புத்தசாசன அமைச்ச ருமான டபிள்யு. ஜே.எம்.லொக்கு பண்டார சபாநாயகர் ஜோசப் மைக்கல பெரேராவிடம் வேண்டுகோள் விடுத்த தற்கிணங்க மேற்படி உரை நீக்கப் பட்டது.

நாடாளுமன்றில் நேற்று முன் தினம் அமைச்சர் மகேஸ்வரன் அறிக்கை ஒன்றை தாம் விடுக்கப் போவதாக சபாநாயகரிடம் அனுமதி கேட்டிருந்தார். அதனை அடுத்து, சபா நாயகரும் அதற்கு அனுமதிவழங் கினார்.

இந்நிலையில் அமைச்சர் மகேஸ் வரனின் அறிக்கை, ஜே.வி.பி. நாடா ளுமன்ற குழுத் தலைவர் விமல் வரவன்சாவின் முதல்நாள் உரைக்கு பதிலளிக்கும் வகையில் அமைந் திருந்தது.

இவ்வறிக்கையை அமைச்சர் மகேஸ்வரன் வாசித்து முடித்ததும், இதனைச் செவிமடுத்த சபாநாயகர் ஜோசப் மைக்கேல் பெரேரா இந்து சமய விவகார அமைச்சுத் தொடர் பான அறிக்கை ஒன்றை விடுப்பதாக கூறியல்லவா அனுமதி பெற்றீர்கள்? ஆனால் அமைச்சு விவகாரம் தொடர் பான அறிக்கையைதானே வாசித்து காட்டுகிறீர்கள்? என்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தைச் சாதக மாக்கிக் கொண்ட சபை முதல்வர் டபிள்யு. ஜே.எம்.லொக்குபண்டார, அமைச்சர் மகேஸ்வரனின் இந்த அறிக்கையை முற்றாக சபைப் பதி வேட்டில் இருந்து நீக்கும்படி கேட்டுக் கொண்டார்.

இதனையடுத்து, அங்கு கூடியி ருந்த எதிர்க்கட்சி எம்.பிக்களும், ஜே.வி.பி. கட்சியைச் சேர்ந்த பாரா ளுமன்ற உறுப்பினர்களும் மேசை களில் தட்டி ஆரவாரம் செய்தனர்.

இதேவேளை, கடந்த செவ்வாய்க் கிழமையன்று 'ஜே.வி.பி. நாடாளு மன்ற குழுத்தலைவர் விமல் வீர வன்சாவினால் வெளியிடப்பட்டிருந்த அறிக்கையில் '200 வருடங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண் டியவரான தமிழீழ விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வே. பிரபாகரனை நோர்வே, ஜப்பான் நாட்டுப் பிரதிநிதிகள் சந்தித்துப் பேசுவது இலங்கையின் சட்டத் துறையை அவமதிக்கும் செயலாகும்' என தெரிவிக்கப்பட்டிருந்தமைக்கு பதிலளிக்கும் வகையிலேயே இந்த அறிக்கை அமைந்தமை குறிப்பிடத் தக்கது. (உ-10)

# மொழிகள் அமுலாக்கல் திட்டமிடல் அபிவிருத்திச் சபை அங்குரார்ப்பணம்

(கொழும்பு)

மொழிகள் அமுலாக்கத்தை திட்டமிட்டுஅபிவிருத்தி செய்யும் சபை ஒன்று அண்மையில் அங்குரார்ப் பணம் செய்யப்பட்டது.

அரச கரும மொழிகளின் அமுலாக் கத்தில் இன்னமும் தீர்க்கப்படாத பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் சம காலத் தேவைக்கேற்றவாறு தமிழ், சிங்கள மொழிகளை வடிவமைத் துக் கொள்வதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது இதன் நோக்கமாகும்.

அண்மையில் அரச கரும மொழித் திணைக்களத்தில் கூடிய கல்வி மான்களும், மொழியியல் வல்லுனர் களும் இச்சபையினை நிறுவியுள் ளனர்.

இச்சபையின் தலைவராக பேரா சிரியர் விமல்கே பலகல்ல நியமிக் கப்பட்டுள்ளார்.

பேராசிரியர்களான ஜே.பி.திஸ நாயக்கா, ஜே.எம்.ஒ.தர்மதாஸ, சுனந்த மகிந்த, ரட்ண விஜயதுங்கா, காரிய் வாசம், எஸ். தில்லைநாதன் ஆகியோர் இச்சபையில் அங்கதத வர்களாக நியமிக்கப்பட்டுள்ளதுடன்,

நிர்வாகத் தொடர்பாடல் நடவடிக் கைகளில் அரச கருமமொழிகளை சரியான விதத்தில் காலத்திற்கு ஏற்ற முறையில் பயன்படுத்துவது தொடர்பாக சபையில் அங்கத்தவர் கள் பொது இணக்கத்தை ஏற்படுத்து வார்கள்.

குறிப்பாக இலத்திரனியல் ஊட கங்களில் மொழிகளின் தவறான பிரயோகங்கள் குறித்த விடயம் முக்கிய கவனத்தை பெறவுள்ளது.

இதனை சீர் செய்வது பற்றி கவனம் செலுத்தப்படும் என்று நீதி அமைச்சர் டபிள்யு ஜே.எம். லொக்கு பண்டார தெரிவித்துள்ளார். (உ-10)

# பாதிக்கப்பட்டவர்களுக்கு லொறிகளில் உணவுப் பொருட்கள்

## புலிகள் அனுப்பிவைத்தனர்

(கிளிநொச்சி)

வெள்ளப்பெருக்கினால் பாதிக் கப்பட்டுள்ள தென்பகுதி மக்களுக்கு உதவும் வகையில் விடுதலைப் புலிகளினால் உலர் உணவுப் பொருட் கள் நேற்று முன்தினம் அனுப்பிவைக் கப்பட்டது.

கிளிநொச்சியில் உள்ள புலிக ளின் சமாதானச் செயலகத்தில் இருந்து நேற்று முன்தினம் காலை 10.00 மணியளவில் 10 லொறிக ளில் உலர் உணவுப் பொருட்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப் பட்டது. (த)


# 73rd Birthday Rememberance

OF



## Mrs. Thavamany - Nadarajah

*(Ramani)*

*My Dearest Acca, Where are You?*
*Beyond the sky that's all so blue?*
*Who gave you wings to fly away*
*To the world or star I can't say,*
*will you give me wings to fly?*
*To your land that's probably so high*
*Marriages Seperated thirty long years*
*we happily rejoined though with tears*
*call me "Amma" musically once more*
*so your not far from me I'll Know.*

*Remembering with tears*
*Navamany (Ranee) Selvarajah*
*"Selvagiri"*
*57, Arasady Road, Jaffna.*

(C/7064)

# சிவபெருமானை உயிருக்கு உயிரெனப் போற்றின் கற்பனைக்கு எட்டாத சுத்த சுக நிலை பெறலாம்

நமது உயிருக்கு உயிராக இருப்பவர் சிவபெருமான். நமது அசைவெல்லாம் அவரது அசைவே. நாமெனஒரு முதலில்லை.அவரே வாழ் முதலாகிய பொருள். இவ்வாறு நம்மை இழப்பதாலாம் பெரும் பயன் யாதெனின்,நமது உண்மையான வாழ்முதற் பொருளாகிய சிவபெருமானை நமது சிவனாகக் கொள்கிறோம். நமது வாழ்க்கை உண்மையான சிவனுள்ள வாழ்க்கையாகிறது. நாம் என்றும உள்ள நித்தியராகிறோம. எங்கும் செறிந்த வியாபகராகிறோம். ஏனெனில், சிவபெருமான் என்றும் எங்கும் உள்ளவரல்லவா? ஆதலால் நாமும் என்றும் எங்குமுள்ளவராகிறோம். சிவபெருமானை நமது உயிராகக்கொண்ட வாழ்க்கை எத்துணைப் பெருமைமிக்க வாழ்க்கை! அவரை உயிராகக்கொண்ட நமக்குக் குறையேது? அச்சம் ஏது? கேடேது? சிவயோக சுவாமிகள் இந்த உண்மையை நாமெல்லாம் நன்கு மனதிற் பதித்துக்கொள்ளும் வண்ணமாய் 'கடவுள் நம் எல்லோருடனும் கூட இருக்கிறார்' 'அவரால் நம்மைக் கணமேனும் பிரிந்திருக்க முடியாது' 'எல்லாம் வல்லவராயினும் அவரால் நம்மைப் பிரிந்திருந்தல் இயலாது' எனக் கூறுவார்.அன்னையைப் போல் ஆதரிக்கும் இறைவனை உயிருக்கு உயிராகக் கொண்டுள்ள நாம்,பதைப்பற்று,ஆறுதலாக வாழலாம் அல்லவா?

### நாமெல்லாம் ஒரே ஆள்

எல்லாருள்ளும் சிவனே சீவனாக உள்ளமையால் நாமெல்லாம் அச்சிவபெருமானின் அடியார்கள் எனும் ஒரே சாதியினரே.நம்முள் பெரியர், சிறியர், முதியர்,இளைஞர்,மடையர்,ஞானியர் என்ற பேதங்கள் ஏதுமில்லை. இப்பேதம் யாவும் நீங்கிய பெருமையராய் நோக்கினால் நாமெல்லாம ஒருவரே.சுவாமிகள் இந்த உண்மையைப்பலபல உபாயங்களினால் உணர்த்தி வைத்தார். தமது அறையில் தம்முன்னிலையில் உள்ளோர் எத்தனைபேர் எனக் கேட்டு, அதன் விடையை எண்ணிக் கணக்கிட்டுக் கூறியவரைநோக்கி,' அது எப்படியாகும்?நம்முள் எல்லாம் கடவுள்ஒருவரே உள்ளமையால்இங்கு ஒருவரே உள்ளார்'என்ற வண்ணம் கூறி உணர்த்தியது ஒரு வண்ணம். 'தம் முன்னிலையிலிருந்து குழந்தைக்கும் தமக்கும் ஒரு வயது எனக் கூறி உணர்த்திய வண்ணமொன்று. நாம் உளோம்என்று



பன்மை வினை முற்றாற் கூறாது, உளேன் எனக் கூறியதும் ஒரு வண்ணம்.இவ்வண்ணமாக 'நாமெல்லாம் ஒரேஆள்' எனச் சுவாமி உணர்ததிய உண்மை நாம் மனங்கொள்ள வேண்டிய முக்கிய உண்மையாகும. ஏனெனில் நாமெல்லாம் 'நான் நான்' என்று அகங்கரிக்கும் புல்லர்களாக இழிந்து போயிருக்கிறோம்.நாம் நம்மில் ஒரு பகுதியினரைத் தாழ்த்தப்பட்ட சாதியராகத் தள்ளி வைத்திருக்கிறோம். நாமெல்லாம சிவபெருமானின் அடிமைகள் எனும் உண்மையை மறந்து, நமக்கு 'அடிமைக் குடிமைகள்' உள்ளதாக எண்ணி இறுமாந்திருக்கிறோம். குலப்பெருமை,கல்விப் பெருமை, பணப் பெருமை என்பனவற்றைப் பெரிதாக மதித்து,இப் பெருமைகள் இல்லாதோரை இகழ்ந்தொதுக்கிறோம். இப்பெருமைகளுடையோரை வியக்கின்றோம் ' பெரியோரை வியத்தல் இலமே, சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே' என்ற எமது பண்டைய பண்பாட்டை ஏட்டளவில் மட்டும் பிதற்றுகின்றோம். 'நாமெல்லாரும் ஒரே ஆள் என்ற நல்லறிவு பிறக்குமிடத்து, நமமைப் போன்று எல்லாரையும் நேசிக்கும் பேரன்பு இயல்பாகப் பெருகுமலலவா?தன்னுயிர் போல் மன்னுயிரையெல்லாம் நேசிக்கும் இலட்சியம் கை கூடுமல்லவா?எல்லார் நலத்தையும் நம் நலமாகவே கொள்ளும் நல் வாழ்க்கை வாய்க்குமல்லவா? இது எல்லார் பலத்தையும் நம்பலமாகக் கொள்ளும் பலம் மிக்க வாழ்கையாகும் அல்லவா? இத்தகைய பேரன்பும் பெருநலமும்,பெரும் பலமுடைய வாழ்க்கை பண்பட்ட வாழ்க்கையாகவும்,உலகுக்கெல்லாம் திசை காட்டியாக அமையத்தக்க மாண்பான வாழ்க்கையாகவும் அமையுமல்லவா!

### இந்த உலகையும் உடலையும் மெய்யெனக் கொள்ளாமை

'உண்மை என்றும் இருந்தபடியே இருக்கிறது. உலகம் ஒரு விளையாட்டு' எனத்தேர்ந்தவர் உலகை உண்மை எனக் கொள்ளமாட்டார்கள்.இவ்வண்ணமே சீவன் சிவன் எனத் தெளிந்த சிவதொண்டர் மாயுமுடல் நாமெனக் கொள்ளார். ஆனால் நாம் இந்த உலகையும்,உடம்பையுமே மெய்யென்று நம்பி வாழப்பழகி விட்டோம்.ஆதலால் புலன் வழிச் சென்று ஆசைவயப்பட்டு மோசம் போகிறோம். நாம் எதிலும் ஆதாயத்தை நோக்கமாகக் கொள்கிறோம். சுவாமி 'ஆதாய மாக்குவதுமொன்றுமில்லை; இழந்து போவதுமொன்றுமில்லை' என அறுத்துறுத்திச் சொன்னார். நாமோ இலாப நட்டக் கணக்குப் பார்ப்பவர்களாகவே உளளோம். செல்வத்துக்கழகு செழுங்கிளை தாங்கல் என்பது எமது செமமை சான்ற பண்பாடு.நாமோ நம் சகோதரன் ஓலைக் குடிசையில் இருக்க,அவனோடு ஒரு தொடர்பும் வையாது எல்லைக்கு மதிலெழுப்பிப் பெரும் மாடமாளிகையில் வாழ்கிறோம். இரப்பவர்க்கு ஈயாது என்றும் தேடுகிறோம். தரகர்களும், கடத்தல் காரர்களும் நமது சமூகத்திற் போல,பிற சமூகத்தவரிடம் இத்துணை முக்கியத்துவம் உடையோராயில்லை.பள்ளிக்கடை வைத்துப் பணம் சம்பாதிக்கும் முறையை உலகுக்கு அறிமுகம் செய்தவரும் நாமே. சுவாமி 'செல்வச் செருக்கால் தீவினை ஆற்றுகிறோம். அல்லாற் கடற்குள்ளே ஆழ்ந்திடுவோம்'என நம்மை எச்சரித்தார். பேரப்பிள்ளைக்குமாகச் சேர்த்து வைக்கும் நம் சிறுமதியை எள்ளி நகையாடினார்.'தோளில் இருக்க விட்டால், காதைக்கடித்துவிடும்' எமது கொடூரப் பண்பைக் கண்டித்துரைத்தார். நாம் வெளிநாட்டுச் சீவியத்தைப்பெரிதாக மதிக்கிறோம். ஊரார் வீட்டுக்காசில் உல்லாசம் புரிவதும், அகதிப்பணத்தில் கௌரவமாக வாழ்வதின் சிறுமையும் ஆகிய இவற்றைச் சிந்தையிற் கொள்ளாது விட் டோம்.

பரவெளியாகிய அகண்ட வெளியின் நன்மோன நிறைவோ நம் கற்பனைக்கும் எட்டாத சுத்த சுக நிலையே ஆகும். அந்த தூய சுகவாரிதியில் தோய்ந்து மகிழும் இன்ப சாகர மோனமெனும் வடிவினரே நாம் என்பதையே சுவாமி உணர்த்தினார். இந்த மோனத்தில் பொருந்தியவாறே உலகல் பொருந்திய வண்ணம் வாழுமாறு அவா கூறினார். அதாவது ஒன்றும் மோசம் போவதில்லை என்னும் உறுதியுடன் தம்பி என்பதைத் தம்பி என்று கொண்டும ,ஐயா என்பதை ஐயா என்று கொண்டும் யாரோடும் உட்பகை கொள்ளாது, அனைவருடனும் அன்பாக வாழுமாறு கூறினார். இதுவே வேதாகம நெறிப்பட்டதும்,தீர்க்கதரிசிகளும்,தருமவான்களும் அழுத்தி அழுத்திக் கூறியதுமான மாட்சிமைப் பட்ட வாழ்வாகும். □

சிவதொண்டன்

வெள்ளி நற்சிந்தனை

## பொங்கல் விழா

(கல்வயல்)

வற்றாப்பளை கண்ணகை அம்பாள் ஆலய பொங்கல் விழா எதிர்வரும் ஜூன் மாதம் 9ஆம் திகதி நடைபெறவுளளது.

அன்றைய தினம் விசேட அபிடேக ஆராதனைகளும் இடம்பெறவுள்ளன.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச சூழநிலையினையடுத்து இப்பொங்கல் விழாவில் இம்முறை பெருமளவு பக்தர்கள் கலந்துகொள்வார்கள் என எதர்பார்க்கப்படுகின்றது. (உ-36)

## புதியசட்டமூலம் பாராளுமன்றில்

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் தொடர்பான புதிய சட்டமூலம் ஒன்று நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

இச்சட்டமூல விவாதத்தின் போது பாராளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தனா,தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்ட நிலையில் இச்சட்ட மூலம் அவசியம்தானா எனக் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த நீதி அமைசசர் லொக்கு பண்டார வடக்கு-கிழக்குக்கான உள்ளூராட்சித் தேர்தல் ஒத்தி வைக்கப்படமாட்டாது எனத் தெரிவித்தார். (ந-3)

## நடன நிகழ்ச்சி

(கொழும்பு)

கொழும்பு பௌத்தாலோக மாவதையில் அமைந்துள்ள இந்து கலாசார நிலையத்தில் இம்மாதம் 30ஆம்திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு நிலைய மாணவர்களின் நடன நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

மேற்படி நிலையத்தில் 1998ஆம் ஆண்டிலிருந்து பெருமளவு மாணவர்களுக்கு பரதநாட்டிய வகுப்புகள் ஒழுங்காக நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

## அனர்த்த முகாமைத்துவ மேற்பார்வைக்குழு ஜனாதிபதியின் கீழ் இயங்கவேண்டும்

### பிரதமர் கடித மூலம் தெரிவிப்பு

(கொழும்பு)

அனர்த்த முகாமைத்துவ மேற்பார்வைக்குழு ஜனாதிபதியின் கீழ் இயங்கவேண்டுமென்று பிரதமர் ரணில் விக்கிரம சிங்க ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

நாட்டின் வெள்ளப்பெருக்கு நிலைமை,அது தொடர்பாக அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றி அக்கடிதத்தில் விளக்கப் பட்டுள்ளது.

மேற்படி குழுவில் ஜனாதிபதி, பிரதமர் ,சம்பந்தப்பட்ட அமைச்சர்கள்,குறித்த பிரதேசத்திற்குரிய மாகாண முதலமைச்சர்கள் ஆகியோர் அங்கம் வகிப்பர். இதேவேளை, ஜனாதிபதி தலைமையில் ஒரு அனர்த்த முகாமைத்துவ நிரந்தரக குழுவை அமைப்பதற்கான சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கான ஏற்பாடுகளை அனர்த்த முகாமைத்துவ அமைச்சு செய்து வருகிறது.

நிவாரணப் பொருட்களை பாதிக்கப்பட்டவர்களிற்கு வழங்கும் பணிகளை துரிதப்படுத்துவதற்கு ஜனாதிபதியால் ஆரம்பிக்கப்பட்ட ஒருங்கிணைப்புக்குழு ஏற்கனவே செயறபடத் தொடங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## இந்தியாவில் உள்ள வெள்ளரசு மரத்தில் வைரஸ் தாக்கம்

(கொழும்பு)

இந்தியாவின் தம்பதீப புனித தலத்தில் உள்ள வெள்ளரசு மரம் வைரஸ் தாக்கத்திற்குள்ளாகியிருப்பதால் அதனைப்பாதுகாக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு இந்தியாவில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர்,கல்வி கலாசார அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேவேளை,பௌத்த மதத்தினரின் முக்கிய வழிபாட்டுத்தலமான தம்பதீப தலத்தில் இருக்கும் இவ் வெள்ளரசு மரம்,மேற்படி தலத்தை தரிசிக்கச் செல்லும் மக்களின் செயறபாட்டினாலேயே வைரஸ் தாக்கத்திற்குள்ளாகியிருப்பதாக விவசாய ஆராய்ச்சி நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

குறிப்பாக,தம்பதீப தலத்தை தரிசிக்கச் செல்லும் பக்தர்கள் மேற்படி மரத்தின் மீது தொட்டு வணங்குவது, விளக்குகளை ஏற்றி வைப்பது, பல்வேறு பதார்த்தங்களைக் கொண்ட தீர்த்தத்தினை மரத்தின் மீது ஊற்றுவது போன்ற செயற் பாடுகளினாலேயே இவ்வெள்ளரசு மரம் பாதிப்படைந்து வருவதாகவும் அந்நிறுவனம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (உ-10)

## தேசிய வெள்ள அனர்த்தமாக பிரகடனப்படுத்த கோருகிறார் மகிந்த

(கொழும்பு)

இலங்கையின் தென்பகுதியில் தற்போது பெரும் அழிவை ஏற்படுத்தியுள்ள வெள்ள அனர்த்தத்தினை தேசிய வெள்ள அனர்த்தமாக பிரகடனம் செய்யுமாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஸ அரசிடம் வேண்டுகேள் விடுத்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் கருத்து தெிவிக்கையில், தற்போதைய சூழ்நிலையில் இது விடயத்தில் சிறப்பாக செயற்பட்டு சவால்களை வெற்றி கொள்ளவேண்டுமானால் அரசியல் கருத்து வேறுபாடுகளையோ அல்லது முரண்பாடுகளையோ மறந்து அனைவரும் ஒற்றுமையுடன் செயறபடவேண்டும்.

நிவாரணப் பணிகளில் அனைத்து சகதிகளையும்,வளங்களையும் திட்டமிட்ட வகையில் பயன்படுத்தி நிவாரணங்களை சீரான முறையில் பகிர்ந்தளிக்க வேண்டும் என்றார்.(உ-10)

## முன்னுரிமை அடிப்படையில் பிறப்பு, இறப்பு அத்தாட்சிப் பத்திரம் வழங்க வேண்டாம்

### அரச அதிபர் அவசர பணிப்பு

(யாழ்ப்பாணம்)

முன்னுரிமை அடிப்படையில் பிறப்பு இறப்பு, அத்தாட்சிப் பததிரங்களை வழங்க வேணடாம் என மேலதிக மாவட்டப் பதிவாளருககு யாழ். அரச அதிபர் பணித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் மேலதிக மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திற்கு அரசாங்க அதிபர் கையொப்பமிட்டு அனுப்பிய கடிதம் மேற்படி அலுவலக வாயிலில் ஒட்டப்பட்டிருப்பதை அவதானிக்க முடிந்தது.

அதில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது; பிறப்பு,இறப்பு அத்தாட்சி வழங்குவதில் காலதாமதம் ஏற்படுவதாக எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

அத்துடன்,செயலகத்தில் கடமையாற்றும் பலர் முன்னுரிமை அடிப்படையில் பிறப்பு,இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறுவதாகத் தகவல் கிடைத்துள்ளது.

இதனால் சாதாரண மக்கள் உரிய காலத்தில் பிறப்பு,இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களையும்அதன் பிரதிகளையும் பெறுவதற்குத் தடை ஏற்பட்டுள்ளது.

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் எந்தவிதமான முன்னுரிமை விண்ணப்பங்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-7)

## வடக்கு~கிழக்கில் ஆசிய அபி. வங்கி உதவியுடன் 690 திட்டங்கள் அமுலாகும்

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மாகாண அபிவிருத்திக்கென ஆசிய அபிவிருத்தி வஙகி 3 ஆயிரத்து 900 கோடி ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.

இந்நிதி வடக்கு-கிழக்கில் மீள் குடியமர்வுக்கு பயன்படுத்துவதற்காகத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி 690 திட்டங்களுக்குஇந் நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

மள் குடியமரும மக்களுக்கு வீட்டு வசதி, கிணறு,மலசல கூடவசதி, கலவி,போக்குவரத்து வசதிகள் என்பவற்றை ஒழுங்கமைத்துக் கொடுப்பதற்கு இந் நிதி பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த)

## விபரம் பதிவு

(தனங்கிளப்பு)

தனங்கிளப்பு ,மறவன்புலோ, கைதடி,நாவற்குழி ஆகிய விவசாய சம்மேளனங்கள்,அப்பகுதியில் உள்ள விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்களை வழங்குவதன் பொருட்டு எதிர்வரும் 25ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு கோயிலாக்கண்டி மாகாலட்சுமி வித்தியாலயத்தில் பெயர் விபரங்களைப பதிவு செய்யவுள்ளது. (உ-37)

# பிறழ்வின் தோற்றம்

## வெள்ளி முற்றம்

நானோ? ஓம் சாப்பிட்டனான். புட்டும் மற்றது பயித்தங்காக் கறி இரவான் இருந்தது. அம்மா தந்தவ - வடிவாச் சாப்பிட்டிட்டுத் தான் பள்ளிக்கூடம் வந்தனான். ஏன் கேட்டனியள்? சும்மா கேட்டனியளோ? அதொண்டு எங்கட அமமா காலமை, இரவு - இரண்டு நேரம் சாப்பாடு வடிவாத் தருவ. இரணடு நேரத்துக்கு மேலை சாப்பிட்டா பேத்தை வண்டி வைக்கும் எண்டு சொல்லுவ.

எங்கட முன்னால் வீட்டுப் பெடியன ரஞ்சன் ஆள் ஒரு ஊமல் பெடியன் தானே - ஆளைப் பாத்தனியளே என்ன மாதிரிப் பேத்த வண்டி! அவைக்குச் சாப்பாட்டுக்கும் கஷ்டந்தான். அவன் கண்ட நேரமும் எங்கினையும் களவெடுத்தும் தின்னிறது அதைப் பாத்துத் தான் அம்மா எங்களுக்குச் சொல்லுறவ கண்ட நேரமும் சாப்பிடப்பிடாது எண்டு.

அப்பா என்ன தொழிலோ? ஏன் நீங்கள் அப்பாவைப் பற்றித் தேவையில்லாமல் கேக்கிறியள்? எங்கடை அப்பாவோடை நாங்கள் கதைக்கிறேல்லை. சரியோ? குடிச்சுப்போட்டுவந்து நெடுகவும் எஙகடை அம்மாவோடை சண்டை படிக்கிறவா. அப்படியான ஆளோடை என்னத்தைக் கதைக்கிறது?

ஆய்க்கினை தாங்கேலாமல் அம்மா அப்பாவை ஒருக்காக் காவல் துறையிலை பிடிச்சுக் குடுத்தவ. அவங்களையும் ஏதோ கெஞ்சி மண்டாடியாக்கும் பிறகு காவல் துறை வெளியிலை விட்டிட்டுது இவரை. அவர் ஒழுங்கையிலை வந்து நிண்டு. "எடியே பாத்தியேடி... என்னை விட்டிட்டாங்கள் நான் உன்னை என்ன செய்யிறன்பார்" எண்டு கத்தினவர்.

இல்லை. இல்லை. வெருட்டில்லை. அப்ப அவரை விடேக்கை... அம்மா இஞ்சை தோட்டத்திலை பயறு, உழுந்து எல்லாம் விதைச் சிருந்தவ. சரியோ? அப்ப, இவர் அதை ஒண்டும் வெட்டவிடாமல் கரைச்சல் படுத்தி, திருப்பியும் அம்மாக்கு அடிச்சு அப்பிடிப் பெரிய பிரச்சினை அப்ப, அம்மா திருப்பியும் காவல் துறைக்குச் சொல்லி அவங்கள் பிடிச்சுப் பேந்தும் உள்ளுக்குப் போட்டிட்டாங்கள்.


என்ன? மேசையிலை ஏறிறதும் இறங்கிறதுமா நிக்கிறனோ? ஓ... அப்பிடித்தான். வகுப்பிலை ஒரு இடத்திலை இருக்கமாட்டன். அதுதான் ரீச்சரும் என்னைக் குளப்படி எண்டு அடிக்கிறவ.

ரீச்சற்றை அடி எனக்கு நோகிறேல்லை ஏனென்டா அப்பாட்டை வாங்கிப் பழக்கந்தானே எது? அப்பான்ரை அடியோ? ஓ... அப்பாடி அடியெண்டா... நினைக்கேலாத அடி. அப்பிடியே முதுகைப் பிடிச்சுக் குத்துவார். சிலவேளை, அழுதா... அடிஇன்னும் கூட விழும். எனக்கு மட்டுமில்லை. தங்கச்சிக்கு.. மற்றது எங்கடை கடைக்குட்டித் தம்பிக்குக்கூட விழும். அப்ப, அம்மா என்ன செய்வ எண்டா.... ஆள வர... எங்களை பத்தைக்குள்ளே ஒழிச்சு விட்டுட்டு அதுக்குள்ளைதான் சில வேளை சாப்பாடும் கொண்டுவந்து தருவ.

ஒரு நாள் பாருங்கோ.. அம்மாக்கு கிளி சிறியாத் தடியாலை அடிச்சு... அந்தத் தடி அப்படியே நெஞ்சைச் சுத்திப்பிடித்த மாதிரி காயம். அப்படியே பதிஞ்சுபோச்சு.... இப்பிடி... ஓ... அதுக்குப் பிறகு அம்மாக்கு ஒரே நெஞ்சுக்குத்து வாறது...

ஆர்... நானோ... ஓ... கோவம் வந்தால் வகுப்பிலை பெடியலுக்கு அடிப்பன்... அவை ஒருத்தரும் என்னோடை செருக ஏலாது. சரியோ...

ஓ... நான் கதையைப் பாதியிலை விட்டிட்டன். பிறகு ஒரு நாள் அம்மாக்கு இவ்விடத்திலை குத்தி... அம்மாக்குச் சாப்பிட ஏலாது... பேந்தொருநாள் காலை அடிச்சு... கால் வெடிச்சுக் கொஞ்சநாள் நாடக்க மாட்டாமலும் இருந்தவ.




அப்ப... எனக்கு அப்பா எண்டாலே பிடிக்காது. எங்களுக்குத்தான் ஒண்டுமில்லாட்டிலும் இவன் குட்டி... சின்னத்தம்பிக் கெண்டாலும் ஒரு விசுக்கோத்துப் பெட்டி எண்டாலும் ஒரு நாளும் வாங்கிக் குடுக்கேலை அவர்.

அது தானே... அப்ப எங்கடை தங்கசசி ஒரு நாள் ஒரு பொல்லாங் கடடையாலை தூக்கி அப்பாக்கு எறிஞ்சவள் ஆத்திரத்திலை.

எனக்கோ... எனக்கு இப்ப சரியாப் பத்துவயது. நான் ஐஞ்சாம் வகுப்புப் படிக்க வேணும். இப்ப... ஆனா நான் மூண்டாம் வகுப்புத் தான் படிக்கிறன். எனக்கு இடையிடை முட்டு வருத்தமும் வாறது. பள்ளிக்கூடமும் ஒழுங்காவாறேல்லைத்தான். எந்த நாளும் சளி மூக்காலை சளி வடியிறதெண்டு பெடியள் என்னை "மூக்குச் சளி" எண்டு பட்டம் தரிப்பங்கள். கொஞ்ச நேரம் கேட்டுக்கொண்டிருப்பன். பேந்து பட்டம் தரிக்கிற ஆக்களுக்கெல்லாம் பிடிச்சு நல்ல சாத்துப்படி கொடுத்துடுவன். அந்தநேரத்திலை தான் ரீச்சரிட்டையும் அடி வாங்கிறனான். எனக்கு "முகுந்தன்" எணடு நல்ல பெயர் எண்டு இருக்கத்தக்கனையா "மூக்குச் சளி" எண்டு கூப்பிட்டால் என்ன ஆத்திரம் வரும் சொல்லுங்கோ பார்ப்பம்! நுளம்புக் கடிக்கை கிடந்து மலேரியாவும் அடிக்கடி வரும். பிறகு மலேரியா குளிசை போட மாறும். பேந்து வரும். காச்சல் வரேக்கை சும்மா குலைப்பன் அடியெண்டாத் தாங்கேலாமல் இருக்கும். இந்தப் பிரச்சினையையளுக குள்ளை நான் ஊத்தையா வாறனாம் எண்டு ரீச்சரும் பேசிறா.

ஆ... எங்களுக்கோ? சொந்தக்காரரோ? இருக்கினம். ஆனா நாங்க ஒரு வீட்டையும் போறேல்லை. ஆக ஒரே ஒரு பெரியம்மா வீட்டைதான் போறனாங்கள். எங்கடை அம்மம்மா கலா அன்ரி வீட்டிலை தான் இருக்கிறா. நாங்கள் அங்கையும் போறேல்லை. அப்பாவாலை எல்லாரும் எங்களோடை கோவம். அப்பான்ரை ஆக்கள் ஒருத்தரும் கதைக்கிறேலை. ஆக மாமி மாத்திரம் இந்தியாவிலை இருந்து வந்த நேரம் கதைச்சவ ஆ....? இல்லை. இல்லை. பிரச்சினை இல்லை. நீங்கள் இருங்கோ நான் இதிலை நிண்டு கதைக்கிறன். நிண்டு கதைக்கிற தான் சுகம்.

இவ்வளவு நேரமாக் கனகதைகள உங்களுக்கு நான் சொல்லிக் கொணடு வந்தனான். ஒரு கதை மடடும்சொல்லேல்லை. என்னெண்டா... சரியோ... முந்தி ஒரு நாள் அம்மாவை சாரியோ அப்பா கூட்டிக் கொண்டு கொழும்புக்கு போனவராம். சரியோ.... அப்ப... அங்கை ஒரு பெரிய கோயில் மடம் மாதிரி ஒரு இடத்திலை தானாம் நிண்டவையாம் சரியோ.... நிறையச் சனங்களும் படுத்திருந்ததுகளாம். சரியோ... அப்ப இரவு சாப்பாடடுப் பாசல் எடுத்தரச் சொல்லி அம்மா ஐஞ்நூறு ருவாத் தாள் குடுத்தவவாம். அவர் அதைக் கொண்டு போய்க் குடிகுடியெண்டு குடிச்சிட்டு இரண்டு சாப்பாட்டுப் பாசலோடை மிச்சகாசும் இல்லாமல் வந்த வராம். சரியோ... அப்ப... மேலை வெளவால் இருக்கெண்டிட்டு அம்மா கொஞ்சம் தள்ளிப்படுத்தவாம் சரியோ.. அப்ப இவர் வந்து "எடியே... ஏன் அங்க போனனி... நான் விட்ட இடத்தை விட்டிட்டு ஏன்ரி போனனி" எண்டு அவ்ள சனத்துக்கையும் கத்த அதுகள் எல்லாம் கீயோ மாயோ எண்டு எழும்பீற்றுதுகளாம். அண்டைக்கும் அம்மாக்குப் போட்டு அடி அடி எண்டு அடிச்ச வராம். சரியோ...

சனங்கள் ஆரோ பொலிசுக்குச் சொல்லிப் போட்டுதாம். பொலிசு வந்து இவரைப் பிடிக்கப் பிறகுஎங்கடை அம்மா தான் "விடுங்கையா, விடுங்கையா" எண்டு குழறினவாம். பிறகு அவங்கள் விட்டிட்டாங்களாம்.

அப்ப, நெடுக இப்படித்தான். அம்மா சொல்றவ... கலியாணம் கட்டின காலத்திலை இருந்து இப்படித்தானாம்.

அப்பாவை இப்ப காவல்த் துறை பிடிச்சு வைச்சிருக்குத்தானே. அப்ப அவங்கள் சிலநேரம் ஏதும் சாமான் வேண்டிக்கொண்டு வரச்சொல்லிவிட்டால் அவர் அதுக்கிடையிலை ஒருக்கா இந்தப் பக்கம் வந்து தங்கச்சியைத் தேடி "எடியே ஓடாதை இந்தா" என்று சொல்லி பொக்கேற்றுக் காலை காசு பத்து ரூபா எடுத்து நீட்டினவராம்.

அப்ப தங்கச்சி வேண்டுமே? அது எனக்கு வேண்டாம் எண்டுதாம். சரியோ... "இதைப்பிடி, ஓடினியெண்டால் அடிப்பன் எண்டவராம்". தங்கச்சி ஒழிச்சு ஒழிச்சு ஓடி வந்திட்டுது.

தங்கச்சி பாவம்... அது இப்ப கன நாளா வருத்தமாக கிடந்தது. தங்கச்சீயை அம்மன் தொட்டிட்டுது எண்டு அம்மா தங்கச்சியை கொண்டு போய் கோயில் அம்மாட்டை காட்டி அவ திருநீறும் போட்டு நூலும் கட்டி விட்டவ. இப்ப அதற்கு பிறகுதான் தங்கச்சிக்கு கொஞ்சம் சுகம். பிறகு இவர் இப்படி வெருட்டினால் எப்பிடி இருக்கும்.

முந்தி ஒருநாள் தங்கச்சி சின்னப்பிள்ளையாய் இருக்கேக்கை தங்கச்சிக்கு அடிச்சு போடடு, கேற்றுக்கைதூக்கிக் கொண்டு போய் வைச்சிட்டு அப்பா கடந்தவராம். சரியோ... கடந்தவராம்... அது தங்கச்சிக்கு இப்ப சரியான கவலை. கடந்த வராம்... சரியோ.

இப்ப நானும் பள்ளிக்கூடாத்திலை எல்லாருக்கும் அடிக்கிறன் எண்டு என்னோடை கதைக்கச் சொல்லி வேறை ஒரு ரீச்சரை விட்டிருக்கு. எனக்குக் கோபம் வந்தா அடிப்பன் எண்டு நாம் அந்த ரீச்சருக்கும் சொன்னனான்.

அம்மா சொன்னவை... இந்தக் கரைச்சலுக்கை இனியும் இருக்கேலாதாம. யாழ்ப்பாணம் போய் குஞ்சியம்மா வீட்டிலை இருப்பம் எண்டவ.

ஓ... இந்த உழுந்தை வெட்டி அடிச்சுக்கொண்டு நாங்கள் போடுவம். சரியோ... எங்கடை சித்தப்பா ஆக்களுக்கும் நாங்கள் போறதுதான் விருப்பம்... ஏன் சொல்லுங்கோ... அப்பதானே எங்கடை காணியளைப் பிடிக்கலாம். நாங்கள் ஆரையாவது இருததிப்போட்டுத் தான் போவம். எஙகடை அம்மா நல்லாய்த்தைப்பா. காணி இல்லாட்டியும் அவ தைச்சு உழைப்பா. தையல் மிசினை யாழ்ப்பாணம் கொண்டு போவம். எங்கடை அம்மா தைக்கிறதுக்குக் கொஞ்சக் காசுதான் எடுக்கிறவா. ஒரு பாவாடை தைக்க வேறை இடத்திலை ஐம்பது ரூபாவாம். எங்கடை அம்மா 30 ரூபா தான் எடுக்கிறவா. அதாலை ஆட்கள் விரும்பி வருவினம். அண்டைக்கு ஒரு சட்டை தைச்சுக் கொடுக்க அந்த அன்ரி எல்லாருக்கும் காட்டிலை.... வடிவுஎண்டு. அப்ப யாழ்ப்பாணத்திலையும் கனபேர் தைக்க வருவினம். நாங்கள் பள்ளிக்கூடம் வந்தா அம்மா தைச்சுக் கொண்டிருப்பா.

அம்மாக்குத் தனிய இருக்கவும் பயமில்லை. சரியோ... எந்த இரவிலையும் எங்கையும் போவா. வருவா. அப்பாக்கு மட்டும் தான் பயம். வேறை முனிக்குக்கூட அம்மாக்குப் பயமில்லை.

அப்ப நான் போட்டு வரட்டே... கனநேரமாய் கதைச்சுக்கொண்டு நிண்டுட்டன். யாழ்ப்பாணம் போன அங்கையும் சிலவேளை சந்திப்பம் தானே... வாறன் ஆ....

**கோகிலா மகேந்திரன்**


### பாடசாலை
### அதிபர்களுடனான சந்திப்பு

TSSA எனப்படும் தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் இலண்டனில் கடந்த 12 வருடங்களாக செயறபடுகின்றது. 1992ல் யாழ்ப்பர்ணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் (JSSA-UK) என பன்னிரண்டு பழைய மாணவ சங்கங்களுடன் தொடங்கி இன்று 50 பழைய மாணவர் சங்கங்களைக் கொண்டு சிறப்பாக இயங்கி வருகின்றது. யாழ். மாவட்டப் பாடசாலைகளின் விளையாட்டுத்துறையை சிறப்பானதாக்க அதிபர்களுடன் சேர்ந்து செயறபட விரும்புகின்றனர். சங்கத்தின் இந்த ஆண்டின் தலைவரான திரு. எஸ். ஸ்ரீரஞ்சன் அவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருககும் இவ்வேளையில் அதிபர்கள் எல்லோரையும் சந்திக்கும் கூட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அதிபர்கள் அல்லது அவர்களின் உதவியாளர்கள் இந்த ஆலோசனைக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

அ. பஞ்சலிங்கம்
(அமைப்பாளர்)

இடம் : கொக்குவில் இந்துக்கல்லூரி
காலம் : 28.05.2003 புதன்கிழமை, பி.ப 4.00 மணி
தொடர்புகளிற்கு : தொ.பே.இல. 021-222 3754
லண்டன் : செயலாளர், 13, Arcus Road, Bromley, Kent BRI - 4NN(UK)
Tel : 020 86982938

(C/6205)



விஞ்ஞான பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை

### அறிவித்தல்

விஞ்ஞானத்தில் முதலாம் தேர்வு
(முதலாம் அரையாண்டு)
2003& 2003 (A)

மேற்படி தேர்வு 02.06.2003 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறும். முன்னர் அறிவிக்கப்பட்டது போன்று 26.05.2003 ஆம் திகதி ஆரம்பமாகமாட்டாது.

மேற்படி தேர்வுக்கான நேர அட்டவணையை விஞ்ஞான பீட அறிவிப்பு பலகைகளில் பார்வையிடலாம்.

பதிவாளர். (C/6208)



### பாட்டுப் போட்டி

இலண்டனில் (பெரிய பிரித்தானியா) கடந்த 12 ஆண்டுகளாக இயங்கி வரும் TSSA எனப்படுகின்ற தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்திற்கு அவர்களின் நிகழ்ச்சிகளின் போது ராகத்துடன் பாடக்கூடிய கீதம் தேவைப்படுகின்றது. 1992ஆம் ஆண்டு ஜுன் மாதம் 24ஆம் நாள் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 12 விளையாட்டுப் பிரியர்களினால் யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் (Jssa- Uk) என ஆரம்பிக்கப்பட்டு 12 தமிழ் பழைய மாணவர் சங்கங்களுடன் முதலாவது விளையாட்டு விழாவை நடாத்தினார்கள். இன்று இலங்கை முழுவதையும் சேர்ந்த 50 பழைய மாணவர் சங்கங்களுடன் ஆண்டு தோறும் இரண்டு பெரிய விளையாட்டு விழாக்களை நடாத்தி வருகின்றார்கள். ஜனநாயக முறைப்படி ஆண்டு தோறும் தெரிவு செய்யப்படும் நிருவாகம் விளையாட்டு விழாக்களை திறம்பட நடாத்துவதுடன் தங்களின் பாடசாலைகளின் விளையாட்டு முன்னேற்றத்திற்கும் உதவி வருகின்றார்கள்.

மேற்படி கருத்துக்கள் வெளிப்படத்தக்கதாகவும், சுலபமாகப் பாடக்கூடிய ராகத்துடன் கூடியதாகவும் கீதம் அமைய வேண்டும். தெரிவு செய்யப்படும் பாடலை இயற்றுபவருக்கு ரூபா பத்தாயிரம் (10,000) பரிசளிக்கப்படும். தெரிவு செய்யப்படுபவர் பாடசாலை ஒன்றின் ஆசிரியராகவோ, அல்லது மாணவனாகவோ இருக்கும் பட்சத்தில் மேலதிகமாக ரூபாய் 2500 வழங்கப்படும்.

இறுதி முடிவு TSSA செயற்குழுவினால் எடுக்கப்பட்டு வெற்றி பெறுபவர்க்கு அறிவிக்கப்படுவதுடன் பத்திரிகை மூலமும் வெளிப்படுத்தப்படும்

போட்டி முடிவுத்திகதி : யூலை 1ம் திகதி 2003
தொடர்புகளுக்கு : அ. பஞ்சலிங்கம், கோப்பாய் வீதி, உரும்பிராய்.

(C/6206)

# மனச்சுமைகளைத் தாங்கிக்கொண்டு

# தமிழ்நாட்டில் வாழும் ஈழ அகதிகள்

**புரொன்ட்லைன் சஞ்சிகையில் சூரிய நாராயணன் எழுதிய கட்டுரை இங்கு தமிழில் தரப்படுகிறது. (ஆ-ர்)**

**(20.05.2003ம் திகதிய தொடர்ச்சி)**

இந்திய அதிகாரிகளின் அறிவுக்கு அப்பாற்பட்ட, ஒரு சில முக்கிய தகவல்கள் உண்டு. இலங்கையின் குடியுரிமைச் சட்டப்படி, இலங்கைப் பிரஜைகளுக்கு, இலங்கைக்கு வெளியே பிள்ளைகள் பிறந்தால், அண்மையில் உள்ள இலங்கைத் தூதர் காரியாலயத்திற்கு விண்ணப்பித்து பதிவினை மேற்கொள்ளுதல் வேண்டும். இதுசம்பந்தமாக சென்னையில் இருக்கும் இலங்கை பிரதித் தூதுவரின் கருத்துப்படி மிகமிகக் குறைவான விண்ணப்பங்களே கிடைத்துள்ளது என கூறினார்.

ஆனால், இந்தியாவின் குடியுரிமைச் சட்டப்படியும், 1955ம் ஆண்டின் குடியுரிமைச் சட்டம், 3ம் பிரிவின் படியும் இந்தியாவில் ஒரு பிள்ளை பிறந்தால், அப்பிள்ளையின் பெற்றோர்கள் எங்கு பிறந்தாலும் - இந்தியாவில் பிறந்த பிள்ளைக்கு, இந்திய குடியுரிமையே கிடைக்கும். பங்களாதேஷ் பிரச்சினைகளின்படி 1955ம் சட்டமும் 3ம் பிரிவும் மாற்றப்பட்டது.

1986ம் ஆண்டில் திருத்தப்பட்ட சட்டம் யூலை மாதம் 1987ம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின்படி 1.7.87இன் பின்னர் பிள்ளை ஒன்று இந்தியாவில் பிறக்குமேயாகின், அப்பிள்ளையின் பெற்றோர்களில் எவரேனும் ஒருவர் இந்தியப் பிரஜையாக இருந்தால் பிள்ளைக்கு இந்தியக் குடியுரிமை கிடைக்கும்.

மேலும் சட்டபூர்வமாக கூறுவதாக இருந்தால், இலங்கைப் பெற்றோர்களுக்கு இந்தியாவில் பிள்ளை ஒன்று பிறந்தால், அப்பிள்ளைக்கு இந்தியக் குடியுரிமை கோர வாய்ப்புக்கள் இல்லை.


ஆனால் நடைமுறையில் பார்க்குமிடத்து, பிறப்பு சான்றிதழ் பத்திரம் ஒன்று பெற்றுவிட்டால் பெற்றோர்களின் குடியுரிமை விவரங்கள் பிள்ளையின் பிறப்புச் சான்றிதழ் பத்திரத்தில் குறிப்பிடாமல் விட்டால், பிள்ளைக்கு இந்தியக் குடியுரிமை கோர முடியும். இத்தகைய சிக்கலான பிரச்சினைகள் உடனடியாகக் களையவேண்டும் என்ற நோக்குடன், ஆவது இந்திய அரசாங்கம் இலங்கை அரசாங்கத்துக்கு நிலைமையை தெளிவாகச் சுட்டிக்காட்டி, இலங்கைக் குடியுரிமையாளர்களுக்கு இந்தியாவில் குழந்தை பிறப்பின் அவர்களுக்கு இலங்கைக் குடியுரிமையே வழங்கவேண்டும் என்பதை ஆணித்தரமாக எடுத்துச் சொல்லவேண்டும்.

### இலங்கையர்கள், அகதிகள், தீவிரவாதிகள்

இலங்கையர்களோ, அகதிகளோ தீவிரவாத நடவடிக்கைகளுடனோ அல்லது பாரிய குற்றச் செயல்களிலோ இலங்கையில் ஈடுபட்டு, அவர்களுக்கெதிராக நீதிமன்றத்தில் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருந்தால் - அவர்கள் விசேட முகாமகளில் வைக்கப்பட்டிருப்பர்.

1992ம் ஆண்டு, தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்பட்ட 1629 பேர் வேலூர், புதுக்கோட்டை, சேலம், செங்கலபட்டு, சென்னை ஆகிய 5 விசேட முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். பல காலமாக இத்தொகை குறைந்து வந்துள்ளது. தீவிரவாதிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் இல்லையென சட்டபூர்வமாக விளக்கினால், அவர்கள் தாமாகவே நாட்டை விட்டு வெளியேற அனுமதி வழங்கப்படுவார்கள்.

தற்போது தீவிரவாதிகளுக்கென செங்கல்பட்டில் ஒரேயொரு முகாம் தான் உண்டு. இதில் 34 ஆண்கள், 2 பெண்கள், 1 குழந்தை என 37



A group of Sri Lankan Tamil refugees at Paradi near Dhanushkodi. A file picture.

## தாயகம் திரும்புவதில் பல்வேறு சிக்கல்கள்

பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

### அகதிகள் திருப்பப்பட்டனர்

மே மாதம் 1991ம் ஆண்டு பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலைக்குப் பின்பு இலங்கை அகதிகளை உடனடியாக வெளியேற்றும்படி, தமிழ் நாட்டரசு மத்திய அரசினை வலி யுறுத்திக் கேட்டுக்கொண்டது. திருப்பி அனுப்புமசட்டம் 1.1.92 இல் ஆரம்பித்தது.

இலங்கையின் சமாதான சூழல் தோன்றாத இக்கட்டான சூழ்நிலையில் அகதிகளின் விருப்பங்களுக்கு எதிராகவும் அவர்களுக்கு விளங்காத ஆங்கில மொழியிலும் எழுதப்படடுள்ள பத்திரங்களில கையொப்பங்களைப் பெற்றபின்பும், பல பாகங்களில் இருந்து தோன்றிய பலத்த கண்டனங்களுக்கு மத்தியிலும் அவர்கள் திருப்பியனுப்பப்பட்டார்கள்.

குறிப்பாக அரச சார்பற்ற நிறுவனங்கள் அகதிகளுடன் தோள்கொடுத்து செயலாற்றிய மனித உரிமை அமைப்புகள் கண்டனங்களைத் தெரிவித்தன.

ஆசிய அவதானி என்ற அமைப்பின்படி மறைமுகமாகவோ/ நேரடியாகவோ அகதிகள் மிரட்டப்பட்டார்கள். போதிய காரணம் இன்றி கட்டாயமாக சிறைப்படுத்தப்பட்டார்கள். வழங்கப்பட்டுவந்த சலுகைகள் யாவும் வாபஸ் பெறப்பட்டது. தொழில் ஆற்றுவது நிறுத்தப்பட்டது.

சர்வதேச அமைப்புக்களால் தொடர்ந்தும் எழுப்பப்பட்டுவந்த கண்டனங்களினாலும், இலங்கையில் அகதிகளுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை நிலவி வந்ததாலும், திருப்பி அனுப்பப்படும் விடயங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டது.

இது நியூடெல்லிக்கு யு.என்.எச்.சி.ஆர்ருக்கும் இடையில் யூலை 92 பேச்சுவார்த்தை தொடர்ந்தன. இதற்கமைய ஐக்கிய நாடுகள் சபை உயர் ஸ்தானிகர் காரியாலயம் ஒன்று சென்னையில் தொழிற்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இவர்களுடைய முக்கிய தொழில் அகதிகள் வெளியேறும்போதும் ஒரு முகாமில் இருந்து மற்றைய ஒரு முகாமுக்கு செல்லும்போதும் உதவிகளை வழங்குவது. ஆனால் இவர்கள் முன்பு போல் முகாம்களில் இருந்து செயலாற்ற முடியாது. இந்நிலை வெளியேறும் அகதிகளுக்கு மாத்திரமல்ல அவர்கள் சார்ந்த மற்ற எல்லா விடயங்களிலும் பண்பான மாற்றங்களை ஏற்படுத்தியது.

அகதிகளின் நலன்கருதி சர்வதேச அமைப்பான யு.என்.எச்.சி.ஆர் சென்னையில் நிறுவப்பட்டதினால் இந்திய அரசாங்கத்துக்கு சர்வதேச அரங்கில் பாராட்டுதல்களைப் பெற்றுக்கொடுத்தது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் பி.நெடுமாறன், எஸ்.ராமதாஸ் ஆகியோர் இந்திய அரசாங்கத்தினதும் தமிழ்நாட்டு அரசாங்கத்தினதும் மேற்படி செயற்பாடு தவறு என வழக்குத் தாக்கல் செய்தபோது, நீதிபதியினால் குறிப்பிட்டது யாதெனில் அகதி

ஏஜென்சி ஆகிய U.N.H.C.R. அவர்களை வெளியே அனுப்புவது விருப்பத்தின் பேரிலா, அல்லவா என்பதைத் தீர்மானிப்பது அவர்களுடைய சுதந்திரமே அன்றி நீதிமன்றின் செயற்பாடு அல்ல. ஆனால், யு.என்.எச்.சி. ஆரின் உயர்ந்த தரத்தை யாரும் குறைகூறவில்லை.

### யு.என்.எச்.சி.ஆரின் பெரும் பணிகள்

ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்குரிய உயர் ஸ்தானிகர் செயலகம் தமிழ் நாட்டில் இருந்து இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நல்லுறவுகளையும் தெளிவான விளக்கங்களையும் பேணிப் பாதுகாத்து வந்தது. இலங்கையில் 1987ம ஆண்டில் இருந்து செயலாற்றிவரும் U.N.H.C.R. இரு சாராருக்கும் இடையில் இணக்கத்தையும் நல்லுறவையும் ஏற்படுத்தியதுடன், அகதிகள் திரும்பி அனுப்பப்படும் விடயத்தை வெற்றிகரமாக நடாத்தி வந்தது. மேலும் U.N.H.C.R. கால வெள்ளத்தால் பிரிந்து கவலைக்குள்ளான குடும்பங்கள் திரும்பவும் இணைந்து கொள்ளும் விடயத்தில் மிகவும் அந்நியோந்நியமாக நடந்துகொண்டார்கள். அண்மைக் காலத்தில் 57 குடும்பங்களைச் சேர்ந்த 196 அகதிகள் U.N.H.C.R. இன் நல்லுதவியினால் சந்தோஷமாகத் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பினர்.

எப்போதாயினும் முகாம்கள் சம்பந்தமான முறைப்பாடுகள் ஏதாவது கிடைத்தால் காலம் தாழ்த்தாமல் உடனடியாக தமிழ்நாட்டு அரசாங்கத்துடன் தொடர்புகொண்டு குறித்த விடயத்தை யு.என்.எச்.சி.ஆர். துரித கதியில் முடித்து வைத்தது.

### அகதிகள் திரும்பவேண்டும்

தற்போது காலம் கனிந்திருக்கின்ற இவ்வேளையில் மனப்பூர்வமாகவே அகதிகளை இலங்கைக்கு வரைழைக்கும் விடயத்தை இந்தியாவும் இலங்கையும் ஆலோசிக்கின்றது. நீண்டகாலமாக நிலவிவரும் சமாதான சூழ்நிலையும் இடையிடையே பூசல்களும் புயலும் இருப்பினும் சர்வதேச அமைப்புக்கள் யுத்தத்தினால் சீரழிந்திருக்கும் இலங்

றும் பல விடயங்களிலும் உதவ முன்வந்திருக்கும் இத்தருணத்தில் அகதிகள் பயமின்றி திரும்புவதே சாலச்சிறந்ததாகும்.

தமிழ்நாட்டரசு புனர்வாழ்வு இலாகாவினூடாக எத்தனை அகதிகள் பூரணமாகத் திரும்ப விரும்புகிறார்கள் என்னும் விபரங்களை உடனடியாகச் சேகரிக்கவேண்டும். இலங்கைக்கு திரும்பவிருக்கும் அகதிகளினுடைய கிராமச் சூழல்களில் எவ்வாறு அமைதி நிலவுகின்றது என்பதையும் வீடுகளைச் சுற்றியிருந்த கண்ணிவெடிகள் யாவும் அகற்றப்பட்டதாகி வட்டதா என்றும் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் காரியாலயமும் அரசாங்கமும் இணைந்து உறுதிப்படுத்துவதுடன், தமிழ் நாட்டிலுள்ள இலங்கையின் உயர் ஸ்தானிகருடாக அங்கிருக்கும் அகதிகளுக்கும் இதுபற்றி எடுத்துக் கூறுதல் வேண்டும்.

ஆனால், கொழும்பிலிருந்து வரும் செய்திகள் ஒன்றுக்கொன்று முரணாகக் காணப்படுகின்றது. உள்ளூர்களில் இடம்பெயர்ந்த அகதிகளை மீள்குடியமர்த்தும் விடயங்களில் அரசாங்கம் முன்னுரிமை கொடுப்பது கசப்பான விடயமாகும்.

உன்னிப்பாக நோக்குமிடத்து ஒரே கிராமத்தில் இருந்து, அகதிகளாக கிளம்பியவர்களில் சிலர் இந்தியாவுக்குச் சென்றார்கள். சிலரே இங்கேயே வேறுவேறு கிராமங்களில் தங்கினார்கள். அதாவது உளளூர் அகதிகளைக் குடியமர்த்த இருக்கும் அதே கிராமத்தினைச் சேர்ந்தவரும், இந்தியாவில் இருந்துதிரும்பியவருமான அகதியை ஏன் குடியமர்த்தக் கூடாது? குடியமர்த்துவதற்குக் கிராமம் பூரணமாகியிருந்தால் யாா இருந்தால் என்ன? அகதிகளுக்குள் ளும் வேறுபாடா? மிக மனவருத்தத்தோடு குறிப்பிடப்படுவது யாதெனில், அகதிகளை உற்பத்தியாக்கும் நாடு, அவர்களை திருப்பி எடுக்கும் விடயத்தில் பொறுப்புணர்ச்சி அற்ற அசமந்த போக்குக் காட்டுவதும், அகதிகளை ஏற்றுக் கொள்ளும் அயல் நாடு கால வரையறையின்றி மனிதாபிமானத்துடன் பெருமளவு செலவுசெய்து காப்பாற்றுவதும் எந்த வகையில் நியாயம்?

**தமிழில் விசாகன்**

ஸ்ரீமாவோ சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி, இலங்கையில் உள்ள இந்திய வம்சாவழியினரை இந்தியாவுக்கு திருப்பி அனுப்பியதில் இரண்டு நாடுகளுக்கும் இவ்விடயத்தில் நிறைந்த அனுபவம் ஏற்பட்டிருக்கும்.

### சர்வதேச உதவி

சர்வதேச அமைப்புக்கள் பல இலங்கைக்கு குறிப்பாக யுத்தத்தினால் சீரழிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாணங்களில் விரைவில் பெரியதொரு புனர்நிர்மாண வேலைகளை ஆரம்பிக்கவிருககின்றன. ஆகையினால் அமைக்கப்படவிருக்கும் மாபெரும் வேலைத்திட்டங்களில் எவ்வளவு மனிதவளம் வேண்டும் என்பதற்குரிய புள்ளி விபரங்களை இப்பொழுதே ஆரம்பிக்கவேண்டும்.

சமாதான சீர் நிலை தவழுகின்ற இந்நேரத்திலே, தமிழ்நாட்டு அரசாங்கமும், ஸ்ரீலங்காவும் இணைந்து அகதிகளுக்குப் பொருத்தமான வேலைகளை ஆராய்ந்து அறிந்து அந்தத் துறைகளில் நன்றாகப் பயிற்சி அளித்தால் அவர்கள் ஸ்ரீலங்கா திரும்பியதும் நல்ல வேலை கிடைத்து சந்தோஷமாகவும் நல்லதொரு பிரஜையாகவும் வாழ முடியுமன்றோ.?

(முற்றும்)

---

# சமாதான தியான அமைப்பினால் கிளி. இல் சர்வமதப் பிரார்த்தனை

(கொழும்பு)

மதங்களுக்கிடையிலான சமாதான தியான அமைப்பு எதிர்வரும் யூன் மாதம் முதலாம் திகதி கிளிநொச்சியில் சர்வமதப் பிரார்த்தனையை நடத்தவுள்ளது.

நாட்டில் தோன்றியுள்ள அமைதிச சூழ்நிலை தொடர்ந்தும் நீடிக்கவும் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தை அடைந்துகொள்ளவும் வேண்டி இப்

இதேவேளை, நேற்று முன்தினம் கொழும்பு ஜிந்துப்பிட்டியில் உள்ள சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் சர்வமதப் பிரார்த்தனை இடம் பெற்றது.

இதில், பொலிஸ்மா அதிபர் ட.ஈ. ஆனந்தராஜா பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

மாதம்பாகம அசாறி தேரர் மற்றும் ஏனைய மதத் தலைவர்களும் இதில் கலந்துகொண்டனர்.

அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லாதவர்
– குறள்

வலம்புரி

## அரசின் பதில் என்ன?

சமாதானப் பேச்சுக்களைத் தொடர்வது, டோக்கியோ மாநாட்டில் பங்கு பற்றுவது தொடர்பில் விடுதலைப் புலிகள் தமது நிலைப்பாட்டை நோர்வேயூடாக பிரதமர் ரணிலுக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். அவர்களின் நிலைப்பாட்டில் அரசியல் யாப்புககு அப்பால் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்தி அதன் மூலம் வடக்குக் கிழக்கை கட்டியெழுப்ப வேண்டும்.

இது விடயத்தில் அரசு சாதகமான பதிலை வழங்கும் பட்சத்திலேயே விடுதலைப் புலிகளின் முடிபும் சாதகமானதாக இருக்கும்.

எனவே இப்போது, பந்து அரசின் பக்கத்தில் உள்ளது. அரசு என்ன பதிலை வழங்கப் போகின்றது என்பதை உலக நாடுகள் மிக உன்னிப்பாக எதிர்பார்த்துள்ளனர். இடைக் கால நிர்வாகம் அமைக்கப்பட வேண்டும் அதுவே விடுதலைப் புலிகளின் உறுதியான நிலைப்பாடு.

விடுதலைப் புலிகளின் இந் நிலைப்பாட்டில் மாற்று ஏற்பாடுகளுக்கு இடம் இல்லை. ஆக, விடுதலைப் புலிகளின் கோரிக்கைக்கு அரசு இணங்கிப் போவதிலேயே சமாதானப் பேச்சுக்களின் மூச்சுத் தங்கியுள்ளது. எனினும் விடுதலைப் புலிகளின் கோரிக்கை குறித்து அரசு சாதகமாக பரிசீலிக்குமா? என்பது இன்னமும் உறுதிப் படுத்தப்படாத நிலையில் சமாதானப் பேச்சுக்களின் நகர்வு தடைப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாகம் சம்பந்தமான கோரிக்கை உடனடியாக முன் வைக்கப்பட்டதல்ல. அது ஏற்கனவே முன் வைக்கப்பட்ட கோரிகையாகும். இது புலிகள் தரப்பு நியாயம்.

சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுத்துச் செல்லப்படும் போது, புலிகள் திடீரென இடைக்கால நிர்வாகத்தை வலியுறுத்துவது ஏன்? என்ற கேள்வி அரசின் பக்கத்தில் இருந்து எழுந்துள்ளது. இத்தகைய இரு தரப்பு வாதங்களின் மத்தியில் இடைக்கால நிர்வாகத்தை விடுதலைப் புலிகள் வலியுறுத்த வேண்டியதன் அவசியத்தை ஏற்படுத்தியது அரசின் செயற்பாடுகள் என்பது மறுக்க முடியாத உண்மை.

அதாவது, புலிகளுடன் பேசி சமாதானத் தீர்வை அடைய முற்பட்ட அரசு, புரிந்துணர்வு ஒப்பந்தங்களை அமுல்படுத்துவதிலும், உயர் பாதுகாப்பு வலயத்தில் மீளக் குடியமர்த்துவதிலும் காட்டிய அசமந்தம் மற்றும் ஒதுக்கப்பட்ட நிதியை வழங்காமை போன்றவற்றினால் அரசின் மீது நம்பிக்கை இழந்த புலிகள் இடைக்கால நிர்வாகத்தைக் கோரி நிற்கின்றனர். சமாதானமே அரசின் இலக்காயின் புலிகளின் கோரிகையை சாதகமாக பரிசீலிப்பது அரசின் கடமையாக இருக்கும்.

# வட-கிழக்கு இடைக்கால நிர்வாகத்திற்கான மக்கள் ஆணை ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டது

## ரவிராஜ் எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான முன்னெடுப்பைக் குழப்பி வரும் மக்கள் விடுதலை முன்னணியினர், 1988முதல் 1990 வரையான காலப்பகுதியில் நடத்திய படுகொலைகள் தொடர்பாக தெளிவுபடுத்த முன் வருவார்களா? என்று யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான என். ரவிராஜ கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு இடைக்கால நிர்வாக அலகு தொடர்பாகப்பொது ஜன ஐக்கிய முன்னணியினரும் மக்கள் விடுதலை முன்னணியினரும் எதிர்ப்புத்தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளதுடன், புலிகளின் கோரிக்கையைத் தாம முற்றாக நிராகரிப்பதாகவும் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பாக ரவிராஜ் தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்த விசேட பேட்டியிலேயே இவ்வாறு வினாவெழுப்பியுள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு இடைக்கால நிர்வாக அலகு அவசியம் என்று விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள தற்போதைய பிரேரணையைப் போன்று 10 வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதியாலும் முன் வைக்கப்பட்டது.

அதுபோல ஜக்கியதேசிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இந்த விடயம் உள்ளடக்கப்பட்டிருந்தது.

கடந்த 20ஆம்திகதி தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைக கூட்டமைப்பினர் சந்தித்த போது இத்தகைய ,வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு இடைக்கால நிர்வாக அலகு ஒன்று தேவை என அறிவிததிருந்தனர்.

அதற்கமைய தமிழீழ விடு தலைப் புலிகளின் இப்பிரேரணையினை பிரதமர் ரணில் விக்கிரம சிங்க ஏற்கனவே அறிந்து வைத்திருப்பதால் நேற்றுமுன்தினம் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரைச் சந்தித்தபோது இது தொடர்பாக அவர் எந்த வித எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை.

காரணம், கடந்த பொதுத்தேர்தலின்போது ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இந்த விடயம் உள்ளடக்கப் பட்டிருந்தமையினால்தான் அவர்கள் தேர்தலில் வெற்றிபெற்றார்கள், அத்துடன் இதற்கான பூரண ஆதரவை நாட்டுமக்களும் அரசிற்கு வழங்கியிருந்தனர்.

எனவே ,தமிழீழ விடுதலைப் புலகளினால் பிரேரிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக அலகு தொடர்பாக பொது ஜன ஐக்கிய முன்னணி வெளியிட்டுள்ள கருத்துக்களை பிரதமர் ரணில் விக்கிரம சிங்க ஒரு போதும் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

பொது ஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம கட்சிக்குப் புதியவர் என்பதால் இவ்விடயங்களைஅவர் முழுமையாக அறிந்து கொள்ளாது பேசுகிறார்.

எனவே, இவரது கருத்துக்களை நாம் பாரதூரமானதாகக் கருதக் கூடாது. அத்துடன் சரத்அமுனுகம



இனிமேலாவது உண்மைநிலைவரங்களைஅறிந்துகொண்டு பேச வேண்டும்.

இதுபோலவே மக்கள் விடுதலை முன்னணியினரின் நிலைப்பாடும் உள்ளது. அவர்கள் 1988 முதல் 1990 வரையான காலப்பகுதியில் செயற்பட்ட விதத்தைக் கருத்திற் கொண்டு இப்போது அதன் நிலைப்பாட்டை வெளிப்படையாக தெரிவிக்கவேண்டும்.

இது அவர்களின் தலையாய பொறுப்பாகும் .எனவே இவர்களும் இதுவிடயத்தில் மிகவும் அவதான மாகச் செயற்படவேண்டும் என்றார்.

(உ-10)

## மீனவர் -கடற்படை முறுகல் சமரசமாகத் தீர்த்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

மாதகல் பகுதி மீனவர்களுக்கும் கடற்படையினருக்கு மடையில் உருவாகியிருந்த முறுகல நிலை அப்பகுதி கிறிஸ்தவ மதகுருமார் மேற்கொண்ட முயற்சியால் சமரசமாகத் தீர்த்துவைக்கப் பட்டது.

கடந்த 11ஆம் திகதி மாதகல் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த போது கடற்படையினர் தமமைக்கடுமையாகத் தாக்கியதாக மீனவர்கள் இருவர் மனித உரிமைகள ஆணைக்குழு யாழ் .அலுவலகத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இருப்பினும் தற்போது இது விடயம் அப்பகுதி கிறிஸ்தவ மத குருமாரால் சமரசமாகத் தீர்த்து வைக்கப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலக அதிகாரி ருவான் சந்திர சேகரவுக்கு கடிதமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ-7)

## சட்டவிரோத மாட்டிறைச்சி அழிப்பு

(யாழ்ப்பாணம்)

குருநகர்ச் சந்தையில்கடந்த சனியன்று விற்பனைக்காகப் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஒவ்வொன்றும அரைக்கிலோ எடை கொண்ட பொதி செய்யப்பட்ட 25கிலோ சட்டவிரோத மாட்டிறைச்சி பிரதேசப் பொதுச்சுகாதாரப் பரிசோதகரால் கண்டு பிடிக்கப்பட்டு எவராலும் உரிமை கோரப்படாத நிலையில் அழிக்கப்பட்டது.

மேலும் மறுநாள் பாசையூர் மற்றும் புன்கன்குளம் சந்தைக்களிலுள்ள மாட்டிறைச்சிக் கடைகளில் சட்டவிரோதமாக விற்பனை செய்யப்பட்ட 35கிலோ மாட்டிறைச்சியும் பிரதம பொதுச்சுகாதாரப் பரிசோதகரால் கண்டுபிடித்து அழிக்கப்பட்டதுடன் விற்பனையாளர்களும் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

(உ-8)

## பாடசாலை விபரங்களை சமர்ப்பிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இயங்குகின்ற பாடசாலைகளில் உள்ள கட்டடப் புனரமைப்புக்கள், கட்டடப் பற்றாக்குறை மற்றும் கணனி வசதியற்ற பாடசாலைகளுக்கு கணனி வசதி, ஆசிரியர் மாணவர்களுக்கான தளபாடப் பற்றாக்குறை, பாண்ட் வாத்தியக் கருவிகள், பாடசாலை விளையாட்டு உபகரணங்கள் என்பன விசேட நிதி ஒதுக்கீட்டில் இருந்து வழங்குவதற்கு இந்துசமய விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அத்துடன் விஞ்ஞான ஆய்வுகூடம், நூலக வசதி மற்றும் மாணவர்களது விளையாட்டுத்துறையை மேம்படுத்தும் வகையிலான நடவடிக்கையும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி யாழ். மாவட்டத்தில் இவ்வாறான குறைபாடுகளை உடைய பாடசாலைகளின் அதிபர்கள் தமது பாடசாலைகளின் தேவைகளையும், குறைபாடுகளையும் உள்ளடக்கிய விவரமான அறிக்கையை எதிர்வரும் 27ஆம் திகதிக்கு முன்னதாக யாழ். செயலகத்தில் உள்ள இந்து கலாசார அமைச்சின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு அமைச்சர் மகேஸ்வரன் கேட்டுள்ளார்.

(த-5)

## வேலைப் பயிற்சி

(கொழும்புத்துறை)

வடக்குக் கிழக்கு மாகாணத்தின் புனர்வாழ்வு அமைச்சின் அனுசரணையுடன் பிரதேச செயலகங்களினூடாக வேலைப்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இச்செயற்றிட்டத்தின்கீழ் யாழ். மாநகர சபை நடத்தும் மரவேலை, மேசன்வேலைப் பயிற்சிகளில் 55பேர் பங்குபற்றி வருகின்றனர்.

(உ-51)

## கணனிப் பயிற்சி

(கல்வயல்)

தென்மராட்சி பிரதேச செயலகத்தினரால் அண்மையில் இளைஞர் யுவதிகளுக்கான இலவசக கணனிப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

(உ-36)

### தினசரி தியானம்

**இம்மைக்குரிய வாழ்க்கை**

முதுமை பயங்கரமான புலியைப்போல உங்கள் கதவருகில் நின்று பய முறுத்துகிறது. அழகு மறைகிறது. முகத்தில் சுருக்கம் விழுந்து அழகைக் கெடுக்கிறது.(அழிக்கிறது) முடி நரைத்து விடுகிறது. பற்கள் ஆட்டம் கண்டு விடுகின்றன. கூன் விழுகிறது.பிரம்மஞானம் அல்லது இறை பற்றிய அறிவே, பிறப்பு,முதுமை,நோய்,இறப்பு ஆகியவற்றை அழிக்கும் மருந்தாகும். இந்தப்பிரம்மஞானத்தை,சுருதிகளைக்கேட்டல்,சிந்தனை ,தியானம் ஆகியஸ்ரீவற்றால் அடையுங்கள்.

**சுவாமி சிவானந்தர்**

## தற்கொலைத் தாக்குதல் முறியடிப்பு

# இலங்கையிடம் ஆலோசனை கேட்கின்றனர் பிரி.பொலிஸார்

(கொழும்பு)

தற்கொலைத்தாக்குதல்களை எதிர் கொள்வதில் கூடுதல் அனுபவம் கொண்ட இலங்கை, இஸ்ரேல் போன்ற நாடுகளிட மிருந்து இவ்வாறான தாக்குதல்களை முறியடிப்பது தொடர்பான ஆலோசனைகளை பிரிட்டிஷ் பொலிஸார் கேட்டறியவுள்ளனர்.

தற்கொலைத் தாக்குதல்களை எதிர்கொள்வதில் இலங்கை, இஸ்ரேல் போன்ற நாடுகளிட மிருந்து பெறப்படும் ஆலோசனைகள் தமக்கு பெரிதும் உதவுமென பிரிட்டிஷ் பொலிஸார் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

பேர்மிங் ஹாமில் சிரேஷ்ட பொலிஸ் அலுவலங்களுடன் உரையாற்றிய ஸ்கொட்லாண்யார்ட் பயங்கரவாதத் தடுப்புப்பிரிவு உதவி ஆணையாளர் டேவிற் வெனஸ், இவ்வாறு அனுபவங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் சேதங்களை குறைத்துக் கொள்ளும் வழிவகைகளைக் கண்டறியலாம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

(உ-8)

## மோட்டார் வாகனப் பதிவிலுள்ள சிரமம் குறித்து கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

1996ஆம் ஆண்டுக்குப் பின் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களுக்கு தற்போதுகோரப்படும் ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பதிவு இலக்கத்தைப் பெறுவதிலுள்ள சிரமம் பற்றி யாழ். வணிகர் கழகம் போக்குவரத்து ஆணையாளருடன் கலந்துரையாடியுள்ளது.

இதற்கமைய இம்மாதம் 30ஆம் திகதிவரை பழைய நடைமுறைக்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதன்படி மோட்டார் வாகனங்களை விற்பனை செய்யும் கடை உரிமையாளர்களும் கொள்வனவு செய்தவர்களும் ஏற்கனவே கொள்வனவு செய்து இதுவரை பதிவு மேற்கொள்ளாத மோட்டார் சைக்கிள், ஸ்கூட்டர் ஏனைய வாகனங்கள் ஆகியவற்றிற்கு உரிய ஆவணங்கள் அடங்கிய விண்ணப்பங்களை இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.மாவட்ட உதவி மோட்டார் ஆணையாளரிடம் கையளித்துப் பதிவுகளை மேற்கொண்டு வாகனப் பதிவுகளை பெறும்படி அறிவிக்கப் பட்டுள்ளது.

எம்.ரி.ஏ 2விண்ணப்பப் படிவம் விற்பனையை உறுதிப்படுத்தும் நிறுவனத்தின் கடிதத்தலைப்பு, சுங்கத்தளைநீக்க ஆவணம் இதுவரை பதிவுசெய்யாமைக்கான காரணமும் பதிவு செய் யப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் சத்தியக் கூற்றுக் கடிதம் கொள்வனவுக் காசுப்பற்றுச் சீட்டு, வதிவிட கிராமசேவையாளரால் உறுதி படுத்தப் பட்ட தே.அ.அ பிரதி, முத்திரையளவு போட்டோ ஒன்று, பாஸ்போட் அளவு போட்டோ இரண்டு ஆகிய ஆவணங்கள் அடங்கிய விண்ணப்பப்படி வங்களே கோரப்பட்டுள்ளன.

(உ-8)

# தமிழ் விரோத கும்பல்களே பூவண்ணனின் கொலைக்குக் காரணம்

## மட்டு~அம்பாறை அரசியல் துறை அறிக்கை

(மட்டக்களப்பு)

அம்பாறை காரைதீவில் விடுதலை புலிகளின் புலனாய்வுத்துறை உறுப்பினர் ஒருவர் கடத்தப்பட்டு சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக மட்டு அம்பாறை மாவட்ட அரசில்துறை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

'தமிழ் முஸ்லிம் மக்களே விழிப்பாக இருங்கள்' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது தோன்றியுள்ள அமைதிச்சூழலை சீர்குலைத்து மீண்டும் ஓர் யுத்தத்தை ஏற்படுத்தி சுயலாபம் தேட முயலும் சில தீய சக்திகள் தற்போது தமது அடாவடித்தனங்களை காட்டி வருகின்றனர்.

கடந்த கால யுத்தத்தினால் சுயலாபமடைந்த தமிழ் விரோதக் கும்பல்களின் அடாவடித்தனங்களில் ஒன்றாகவே நேற்றுமுன்தினமிரவு எமது இயக்கப் போராளியான பூவண்ணன் என அழைக்கப்படும் காரைதீவைச் சேர்ந்த காத்தமுத்து கோணேஸ்வரனின் திட்டமிட்ட கொலைச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

காரைதீவில் வைத்து ஈ.பி.டி.பி. யினால் கடத்திச்செல்லப்பட்ட பூவண்ணன் கொலை செய்யப்படடு அவரது சடலம் முஸ்லிம் கிராமங்களில் ஒன்றான நிந்தவூரில் போடப்பட்டுள்ளமையானது தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் குரோதத்தை தோற்றுவித்து இரு சமூகங்களிற்குமிடையில் இன மோதலை ஏற்படுத்தி வேடிக்கை பார்க்கும் நோக்கில் மேற் கொள்ளப்பட்ட செயலாகும்.

இவ்வாறான தீய சக்திகளிடமிருந்து தமிழ் முஸ்லிம் மக்களை விழிப்பாக இருக்குமாறு வேண்டிக் கொள்ளும் அதேவேளை மீண்டும் இவ்வாறான செயல்கள் தொடருமானால் மிகவும் பாரதூரமான நடவடிக்கை எம்மால் மேற் கொள்ளப்படும் என்பதை வலியுறுத்துகின்றோம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (த-14-5)

## பரீட்சைக்கு தோற்ற முடியாதவர் கவனத்திற்கு

(கொழும்பு)

தற்போது . நடைபெற்றுவரும் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பிற்போடப்பட்டுள்ள பரீட்சைகளுக்கு தோற்றமுடியாத மாணவர்கள் அது குறித்து கல்வி அமைச்சுக்கு தெரிவிக்கும்படி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார். அப்பரீட்சைக்குத் தோற்ற முடியாத மாணவர்கள் அப்பாடங்களை அடுத்த வரும் நடைபெறவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றமுடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார் இதே வேளை இப்பரீட்சைகள் எதிர் வரும் 31ம் திகதியும் முதலாம் திகதியும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது (மற்றொரு செய்தி 3ம் பக்கத்தில்) (ந-5)

### சமாதான...

அமைப்பிற்குப் புறம்பாக நிறைவேற்றுவதில் பிரதமர் ரணில் பெரும் சிரமங்களை எதிர் நோக்க வேண்டிய நிலையில் இருப்பதாகவும்,ஐக்கிய தேசிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் கணிசமான உறுப்பினர்களைக் கொண்ட அரசியல் கட்சிகள் எதிரணியினருடன் கைகோர்து செயற்படத் தயாராக உள்ள நிலையில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா பெரும் சவால்களை எதிர் நோக்கியுள்ளதாகவும் இராஜதந்திரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு குறித்து தமிழ்த் தேசிய கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் ரணிலுக்கு விளக்கிக் கூறிய போதும், அவற்றிற்கு எந்தவிதமான பதிலையும் உடன் தெரிவிக்காமல் அமைச்சரவையில் ஆலோசிக்க வேண்டும் என்று கூறித் தட்டிக்கழித்திருப்பது பிரதமர் மீதான நம்பிக்கைத்தன்மையில் விடுதலைப் புலிகளைச் சந்தேகம் கொள்ள வைத்திருக்கும் என்றும் இராஜதந்திர வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

இது இவ்வாறிருக்க விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் எழுதியுள்ள கடிதத்தில் 2000ம் ஆண்டு பொதுத் தேர்தலின்போது விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் இடைக்கால நிர்வாகசபை திட்டம் பற்றி வலியுறுத்திக் கூறியிருந்தமையைச் சுட்டிக்காட்டி இருப்பதும், விடுதலைப் புலிகள் டோக்கியோ மாநாட்டில் கலந்து கொள்ளுவது கலந்து கொள்ளாமல் விடுவது பற்றி பிரதமர் ரணிலின் கையிலேயே தங்கியுள்ளதாக விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கூறியிருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.(ம)

### புலிகளின்...

ரியதாகும் எனக் கூறினார்.

இதேவேளை புலிகளின் அறிக்கையை நன்கு வாசித்த பின்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அறிக்கை பற்றி கருத்துக்களைத் தெரிவிப்பார் என்று ஜனாதிபதி செயலக பேச்சாளர் ஜனதாச பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறு இருக்க புலிகளின கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படுமாயின் முஸ்லிம்களும் தமது நிர்வாகக் கட்டமைப்புக் கோரிக்கையை தீவிரப்படுத்தலாம் என்றும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (இ)

### புலிகள்...

மக்களுக்கு பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட்டமை குறித்து, கருத்துத் தெரிவித்த விடுதலைப்புலிகளின் அரசியல் பிரமுகர் அன்பரசன் தாம் விடுதலைப்புலிகளின் தலைமைப் பீட ஆலோசனையின் அமைவாக இந் நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ளதாகவும் இதில் எந்தவிதமான உள் நோக்கமும் கிடையாதென்றும் தெரிவித்துள்ளார்.

இந் நிவாரணப் பணிகள் குறித்து வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் கருத்துத் தெரிவிக்கையில்:

இருபது வருடங்களாக கொடிய யுத்தத்தின் மத்தியிலும் குண்டுச் சத்தங்களுக்கு இடையில் வாழ்ந்த நாம் எமக்கு யாராவது உதவிக் கரம் நீட்ட மாட்டார்களா என்று ஆதங்கப்பட்டதுண்டு.

இந் நிலையில் மனிதாபிமான அடிப்படையில் தென் இலங்கை மக்களுக்கு உதவும் வகையிலேயே எம்மால் நிவாரணப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. எமது தலைவரின் வேண்டுகோளிற்கு அமையவே இப் பணி முன்னெடுக்கப்பட்டதென்று கூறினார். (இ-10)

### தமிழ்க...

அரசாங்கம் சாதகமான முடிவை வெளியிடுவதன் மூலம் புலிகளின் பேச்சுக்களில் கலந்துகொள்வது குறித்து தீர்மானிப்பர் என்று விளக்கினர்.

இச் சந்திப்பில் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், என். ரவிராஜ் ஆகியோர் கலந்துகொண்டனர். (இ)


**இந்திய ஜோதிடர் யாழ். விஜயம்**

ஸ்ரீ சோட்டானிக்கரை பகவதி அம்மன் அருள்பெற்ற ஸ்ரீ வெட்டுடைய காளியம்மன் வாக்குப் பெற்ற இந்திய பரம்பரை ஜோதிடர் யாழ். வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப்பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத் தடையா? தொழில் பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப்பிரச்சினையா? தீராத நோயா? எந்தவிதமான பிரச்சினைகளுக்கும் தக்க பரிகாரம் மூலம் தீர்வு காணலாம்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்

**மணிசாமி**

யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி.(பழைய லிங்கம் கூல்பார் அருகில்)
இல.54,மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்(வெலிங்டன் சந்தி அருகில்)
பார்வையிடும் நேரம்:காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை)


# துப்பாக்கிச் சூட்டில் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனையில் நேற்று இரவு இனம் தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் வாகரைப் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் தலையில் படுகாயம் அடைந்த நிலையில் வாழைச்சேனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் என்.புஸ்பராசா என்பவரே படுகாயம் அடைந்தவராவார்.இவர் முன்னாள் ரெலோ உறுப்பினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-14)

# ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் யாழ்.மாவட்டப் பிராந்திய அலுவலகம் பிரதி வெள்ளிகிழமை தோறும் நல்லை நாவலர் மணி மண்டபத்தில் நடத்தி வரும் ஆனமீகச் சொற் பொழிவுத் தொடரில் இன்று வேலணை வைத்திலிங்கம் துரைசாமி மகா வித்தியாலய அதிபர் பொ.அருணகிரிநாதன் 'ஆன்மீக பலமே ஆதாரம்' என்ற விடயம் பற்றி சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (உ)

### அரசின்.....

குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்;

தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதான நடவடிக்கைகள் மக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்க வேண்டும் என்பதே எமது தலைமையின் நிலைப்பாடு இதனால் தான் ஏற்கனவே பேச்சுவார்த்தை மேசைகளில் இருதரப்பும் இணக்கப்பாடு கண்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தற்போது கால அவகாசம் கொடுக்கும் வகையில் பேச்சுக்களை தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளோம்.வெற்று உத்தரவாதங்களையும் உறுதி மொழிகளையும் நம்பி நாம் எதையும் செய்ய முடியாது.

இந் நிலையிலும் யப்பானில் நடை பெறவுள்ள இலங்கைக்கான உதவி வழங்கும் மாநாட்டில் எம்மைப் பங்கு கொள்ள வைப்பதற்கு முயற்சி செய்யும் சர்வதேசத்தை நாம் பாராட்டுகின்றோம். பேச்சுக்களில் இணக்கங்காணப்பட்ட விடயங்கள் நிறைவேற்றப்பட்டு, பாதிக்கப்பட்ட மக்கள் சிறந்த தீர்வைப் பெறவேண்டும் என்பதற்காக சமாதான முன்னெடுப்புக்களை தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளோம். இவ்விடயங்களை நிறை வேற்ற வேண்டும் என்பதில் தலைமை மிகவும் உறுதியாக உள்ளது,

நோர்வே வெளிவிவகார அமைச்சருக்கும் யப்பானின் விசேட தூதுவரிற்கும் இந்நிலை தொடர்பாகநாம் விளக்கியுள்ளதுடன் எம் தரப்பின் பரிந்துரைகள், ஆலோசனைகள் எதிர்கால நடவடிக்கைகள் தொடரபாக தெளிவுபடுத்தியுள்ளோம்.

நாம் முன்வைத்திருக்கும் கோரிக்கைக்கு அரசாங்கம் சரியான தீர்வுகளை எடுப்பது இச்சமாதானப் பேச்சிற்கு வலுவூட்டுவதாக அமையும் இதற்காக பிரதமரிடம் இருந்தும் நல்ல முடிவை எதிர்பார்க்கின்றோம்.

ஸ்ரீலங்கா அரசின் அரசியல் கட்டமைப்புக்களால் தமிழருக்கு எதுவித தீர்வுகளையும் முன்வைக்க முடியாது. ஏனெனில் ஸ்ரீலங்கா அரசின் அரசியல் அமைப்புக்களால் ஏற்பட்ட அடக்குமுறைகளிற்கு எதிராகவே தமிழ் மக்கள் போராட்டத்தை ஆரம்பித்தார்கள். இநநிலையில் அவர்கள் அரசிடமிருந்து எந்த அரசியல் தீர்வையும் எதிர்பார்க்கவும் இல்லை

எனவே இருதரப்பும் இணைந்து இணக்கப்பாடு கண்ட விடயங்கள் நடைமுறைக்கு சாத்தியமான முறையை புதிய சிந்தனைக்கு ஏற்ப செயற்படுத்த சர்வதேசம் முன்வர வேண்டும்.

நாம் இன்னும் சமாதானத்தில் நம்பிக்கை உடையவர்களாக இருக் கின்றோம். யுத்தத்தின்மூலம் தீர்வுகாண்பதைவிட பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பதே சிறந்தவழி என்பதையும் நன்கு உணர்கின்றோம் என்றும் தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார். (இ-4)

# கோயில் தகராறு பூசகருக்கு வாள் வெட்டு

## கொக்குவில் மேற்கில் சம்பவம்

(சுதுமலை)

கோயில் நிர்வாகத்தினருக்கும் இளைஞர் கோஷ்டிக்கும் இடையிலான கருத்து முரண்பாடு வாள் வெட்டில் முடிந்தது.வாள் வெட்டில் கோயில் பூசகர் உட்பட மூவர் படுகாயம் அடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 5 மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றது.கொக்குவில் மேற்கு சித்தி விநாயகர் ஆலயத்தில் இடம் பெற்ற இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது;

ஆலயத்தின் உரிமை தொடர்பில் ஆலய பூசகர்க்கும் அக் கிராமத்து இளைஞர்களுக்கும் இடையில் நீண்டகாலமாக கருத்து முரண்பாடு நிலவி வந்துள்ளது.நேற்றைய தினம் பூசை முடிவடைந்த பின்னர் கோயிலில் இருந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த பூசகர் இளைஞர்களால் வழிமறிக்கப்பட்டு வாளால் வெட்டப்பட்டார்.பின்னர் அவரது வீடும் அடித்துச் சேதமாக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் பிணக்கில் சம்பந்தப்பட்டவர்களை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். (த-252)

# பெண் கிராம அலுவலர்கள் மீது பாலியல் வல்லுறவு

(கொழும்பு)

கடமையில் ஈடுபட்டுவிட்டு வீடு திரும்பிக் .கொண்டிருந்த இரண்டு பெண் கிராம சேவையாளர்களை பாலியல் வல்லுறவிற்குட்படுத்திய கடற்படை வீரர் ஒருவரையும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலநறுவை மாவட்டத்தில் இந்தச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் லொறி ஒன்றில் ஏற்றிச் சென்றே தம்மீது குற்றம் புரிந்ததாக மேற்படி இரு பெண் கிராம சேவையாளர்களும் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். (உ-10)

### புலிகளின் புலனா...

பொலிஸாரினால் நிந்தவூர் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

அங்கு இடம்பெற்ற மரண விசாரணையில் கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

மாலை 6மணியளவில் விடுதலைப்புலிகளினால் பொறுப்பேற்கப்பட்ட சடலம் கொக்கட்டிச் சோலையில் உள்ள விடுதலைப்புலிகளின் அலுவலகத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

.இறுதி அஞ்சலி நிகழ்வுகள் இன்று இடம்பெறவுள்ளது. இறுதி அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து கொக்கட்டிச் சோலை மாவீரர் துயிலும் இல்லத்தில் வித்துடல் விதைக்கப்படும்.(த-14)

# சத்திகிரீவன் பிணையில் விடுதலை

(தென்மராட்சி)

கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் முறைகேட்டுச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையின் செயலாளர் சி.சத்திகிரீவன் ஏனைய இரு பெண் பணியாளர்களும் சரீரப் பிணையில் நேற்றைய தினம் சாவகச்சேரி நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதேசமயம்,இல்லத்தின் பொறுப்பாளர் கே.வீதர்மராசதுரைக்கு பிணை மறுக்கப்பட்ட நிலையில் எதிர்வரும் யூன் 5-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி மாவட்ட நீதிவான் க.அரியநாயகம் உத்தரவிட்டுள்ளார்.(த-77)


**இயற்கை (மூலிகை) மருத்துவ முகாம்**

இயற்கை மூலிகை சிகிச்சை மூலம் ஆஸ்துமா, உடல் பருமன்,உடல் மெலிவு, சலரோகம், மூலவியாதி, முகப்பரு, இளநரை, தலைமுடி உதிர்தல், மாதவிடாய்ப் பிரச்சினை, தலையிடி, வாதம், நாரி உளைவு, கைகால் விறைப்பு, தோல்நோய்கள் மற்றும் தீராத இதர நோய்களிலிருந்தும் எவ்வித பக்கவிளைவுகளும் இன்றி பரிபூரணமாக குணமாக சிகிச்சைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

ஆண்மைக்குறைவு, குழந்தைப் பேறின்மை போன்ற பிரச்சினைகளிற்கு தனிப்பட்ட முறையில் ஆலோசனைகளும் மருந்துகளும் வழங்கப்படும்.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி
Dr.நவனீதன் DYNS.SMP.NC
(இயற்கை மூலிகை மருத்துவ நிபுணர்)
இல. 54, மணிக்கூட்டு வீதி,
யாழ். பயணியர் விடுதி
(வெலிங்ரன் சந்திக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

யோகாசனப் பயிற்சி வகுப்புகளுக்கு பதிவுகள் நடைபெறுகின்றன.

முகாம் நடைபெறும் நாள்கள்
மே 21ம் திகதி முதல் 31ம் திகதி வரை.



**NEW SCIENCE HALL**

கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

**A/L 2004**

**DAY CLASS**

(A/L 2003 பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கு)

எமது வழமையான ஆசிரியர்குழு

ஆரம்பம்-01.06.2003

ஞாயிறு மு.ப.8.00


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.05.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.